(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 3.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2019 யூலை 23, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2019 யூலை 12, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2019 யூலை 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

46/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோய் ஒழிப்புக்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

151/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உள்ளூரதிகார சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த பிரதிநிதிகளின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய உள்ளூரதிகார சபைகள் யாவை;

(iii) அந்த செயலமர்வுகள் நடைபெற்ற நாடுகள், நகரங்கள் மற்றும் கால எல்லைகள் வெவ்வேறாக யாவை;

(iv) இந்த ஒவ்வொரு செயலமர்விலும் பங்கேற்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி செயலமர்வுகளின் பின்னர் குப்பைகூழ முகாமைத்துவத்திற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கிய உள்ளூரதிகாரசபைகள் யாவை ;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

269/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகல மாவட்டத்தின் மெதகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

368/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கொலபதன தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

5.

451/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 70 வயது பூர்த்தியாகியுள்ள மூத்த பிரஜைளுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மாதாந்த கொடுப்பனவு ரூ. 2000/- என்பதையும்;

(ii) 2016 சனவரி முதல் மேற்படி பணத்திலிருந்து ரூ. 100/- வழங்காமல் பிடித்தவைத்துக்கொள்வதாகவும்;

(iii) இவ்வாறு பிடித்துவைத்துக்கொள்கின்ற பணம் சமூக பாதுகாப்பு நிதியம் எனும் பெயரில் கணக்கொன்றில் சேமிக்கப்படுவதாகவும் அலுவலர்கள் அறிவித்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு முதியோர் கொடுப்பனவிலிருந்து பணம் பிடித்துக்கொள்ளல் தொடர்பாக மூத்த பிரஜைகள் தெரிவிக்கின்ற எதிர்ப்பு காரணமாக மேற்படி பணம் அறவிடுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இது வரை அறவிடப்பட்டுள்ள மொத்த பணம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத்தில் மூத்த பிரஜைகளின் நன்மைக்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

469/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பித்த திகதியிலிருந்து 2018 ஆகஸ்ட் வரை கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்புகளுக்கமைய,

(i) சேர்த்துக்கொள்ளப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) பதவிப் பெயர்கள்;

(iii) ஆட்சேர்ப்பு நடைமுறை;

(iv) வெற்றிடங்கள் காணப்பட்ட மாவட்டங்கள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழில்வாய்ப்பு பெறுநர்களில் கண்டி மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற,

(i) ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) பதவிகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஏதேனும் அரச நிறுவனமொன்றில் வெற்றிடங்கள் தோன்றினால், குறிப்பிட்ட நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தில் இருக்கின்ற தகைமையுடையவர்களுக்கு மேற்படி தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டுமென்பதையும், அதன் மூலமாக சம்பந்தப்பட்ட பணிகள் கூடிய செயற்திறனுடன் மேற்கொள்ள முடியுமென்பதையும் அவர் ஏற்றுகொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

472/ '19

கௌரவ. எஸ் சி முத்துகுமாரண,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரசாயன உரப் பாவனையிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்கு உயர் தரத்திலான சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) 2014 முதல் 2017 ஆம் ஆண்டு வரை உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் அளவு ஒவ்வொரு ஆண்டிற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) அந்தப் பசளையின் தரத்தை பரிசோதிப்பதற்கான முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்குமெனில் அது யாதென்பதையும்;

(iv) இப்பசளை தரம் மிக்கது என்பதனை உறுதி செய்யும் நிறுவனங்கள் உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில் அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) தரப் பரிசோதனைக்கு பொறுப்புக்கூறக்கூடியதொரு நிறுவனம் இல்லையென்றால் அவ்வாறானதொரு நிறுவனம் தாபிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

497/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.12.31 ஆம் திகதியன்று மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய மனித வலு மதிப்பீடு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையை ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

(iii) 2015 ஜனவரி முதல் இன்று வரையில், நிறுவனத்துக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள நிரந்தர, அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) ஆட்சேர்ப்பு நடைமுறைக்குக்குப் புறம்பாக ஆட்சேர்க்கப்பட்டவர்களும் இவர்களிடையே உள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) மேற்படி ஆட்சேர்ப்புக்கள் மற்றும் அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

575/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிக்கவரட்டிய, மாகல்லே குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை செய்யப்படும் மொத்த வயல் காணியின் பரப்பளவு எவ்வளவு;

(ii) இக்குளத்தின், குள ஒதுக்கத்தில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருக்கின்றனர் என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், மேற்படி குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவ்வாறு அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தங்கியிருப்பதனால் குளத்துக்கு பெரும் சேதம் ஏற்படுகின்றது என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், மேற்படி அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி இக்குளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

658/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 80 ஆம் தசாப்தத்தில் திருகோணமலை துறைமுகத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளில்,

(i) பல்வகையான உறுதிகளைக் கொண்டிருந்த நபர்களின் எண்ணிக்கை;

(ii) உரிமங்கள் மற்றும் அளிப்புப் பத்திர பெறுநர்களின் எண்ணிக்கை;

(iii) குடியிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தரம்;

(iv) வியாபார நிலையங்கள் மற்றும் ஒவ்வொரு வியாபாரியின் பெயர், முகவரி மற்றும் வியாபாரத்தின் தன்மை;

யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

686/ '18

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர்களை பயிர் செய்துள்ள காணிகளின் அளவு மற்றும் மேற்படி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர் விளைச்சல் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) சிறிய ஏற்றுமதிப் பயிர் செய்கையாளர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

698/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இலங்கைப் பிரசை அல்லாத ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இரட்டை பிரசாவுரிமையுடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

772/ '19

கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டினுள் செயல் முனைப்புடன் தொழில்முயற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தனியார் நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான ஒட்டுமொத்த மூலதனத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) அம் மூலதனத்தை ஏற்பாடு செய்து கொண்ட முறைகள் யாவை என்பதையும்;

(iv) அந்த நிறுவனங்கள் தமது நிதிச் சேவைகளை மேற்கொள்ளும்போது அவற்றின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரம் உடைய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) அவ்வாறான மேற்பார்வைகள் சிறந்த மட்டத்தில் இடம்பெறுகின்றது என திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016/ 2017 ஆம் ஆண்டுகளில் தனியார் நிதி நிறுவனமாகிய ஈ.டீ.ஐ (ETI) நிதி நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு இழப்பீட்டை செலுத்துவதற்கு பொது திறைசேரி நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த பணத்தொகை யாதென்பதையும்;

(iii) தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்த வாடிக்கையாளர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டக்கூடிய வேறு மாற்று வழிகள் யாவை என்பதையும்;

(iv) தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்த வாடிக்கையாளர்களுக்கு பொதுமக்களின் பணத்திலிருந்து இழப்பீடு செலுத்தப்படுதல் தவறான முன்னுதாரணம் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

836/ '19

கௌரவ கே.காதர் மஸ்தான்,— பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011ஆம் ஆண்டு மல்வத்து ஓயா நிரம்பிப் பெருக்கெடுத்து ஓடியதில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் முசலி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் ஒதுக்கிய பணத்தொகை யாது;

(iii) மேற்படி பணத்திலிருந்து ஒரு குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணப் பணத்தொகை யாது;

(iv) நிவாரணப் பணத்தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பணத்தொகையை பிரதேச செயலகப் பிரிவில் பகிர்ந்தளித்த நிறுவனங்கள் அல்லது நபர்கள் யார்;

(ii) மேற்படி நிறுவனங்கள் அல்லது நபர்களது பெயர்கள் மற்றும் அலுவலக முகவரிகள் யாது;

(iii) மேற்படி நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காசோலைகள் பற்றிய விபரம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

15.

854/ '19

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஜனவரி தொடக்கம் ரூ.10,000/- விஷேட கொடுப்பனவு அரச ஊழியர் சம்பளத்தில் சேர்க்கப்பட்டு அடிப்படை சம்பளம் ரூ.10,000/- ஆல் அதிகரிக்கப்பட்டமையினாலும்;

(ii) 2016 ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் சம்பளத்தில் மேற்படி தொகை சேர்க்கப்படாமையினாலும்;

ஓய்வுபெற்ற அரச ஊழியர் சம்பள முரண்பாடு தோன்றியிருப்பதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ஆ) (i) வரவு செலவு திட்டத்தால் மீண்டும் அரச ஊழியர் சம்பளம் உயர்த்தப்பட்டமையால் மேற்படி சம்பள முரண்பாடு மென்மேலும் அதிகரித்துள்ளமையால் இம்முரண்பாடு தீர்க்கப்பட வேண்டும் என்பதையும்;

(ii) சம்பள முரண்பாட்டை தீர்த்துக்கொள்வதற்காக ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபடுவதை தடுக்கப்பட வேண்டும் என்பதையும்;

(iii) அரச ஊழியர் சம்பள அதிகரிப்புக்களின் போது நியாயமான சதவீதத்தை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் சம்பளத்திலும் சேர்ப்பதற்கு நிரந்தர முறையியலொன்றை பேணுவதற்கான முக்கித்துவத்தையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(இ) (i) மேற்படி சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு தேவையான செயன்முறைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) சம்பள முரண்பாட்டு தீர்க்கப்படும் சதவீதம் என்னவென்பதையும்;

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ்:-

(அ) 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிருவாக மாவட்டங்கள் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார இடப்பரப்பும் எல்லைகளும், கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார இடப்பரப்பினுள்ளும், எல்லைகளினுள்ளும், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட "கொழும்புத் துறைமுக நகரம்" என அறியப்படும் மீட்டெடுக்கப்பட்ட காணி இடப்பரப்பை உள்ளடக்குவதன் மூலம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மீட்டெடுக்கப்பட்ட காணி இடப்பரப்பு கொழும்பு நிருவாக மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்படுதல் வேண்டுமெனவும்

இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

பின்வரும் தொடுப்புப் புள்ளிகளில் மேல் மாகாணத்தில், கொழும்பில் அமைந்துள்ளதும் பரப்பளவில் 446.6153 ஹெக்டயர்களைக் கொண்டுள்ளதும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2019.06.11 ஆம் திகதிய CO/DSO/2019/370 ஆம் இலக்கப் படியெடுப்பில் குறித்துக் காட்டப்பட்டதும், "கொழும்புத் துறைமுக நகரம்" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும் காணித்துண்டுகள் 2 முதல் 7 வரையாக அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அக்காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு:-

| தொடுப்புப் புள்ளி - கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கெல்லை | கிழக்கு ஆயத்தொலை | வடக்கு ஆயத்தொலை |
|---|---|---|
| வடக்குத் தொடுப்புப் புள்ளி | 396913.476 | 492847.764 |
| தெற்குத் தொடுப்புப் புள்ளி | 397077.037 | 492290.222 |

(குறிப்பீட்டு ஆயத்தொலை முறைமை: இலங்கைக் கட்டுப்பாட்டு வலை 1999)

1. **காணித் துண்டு இல. 2 : பரப்பளவு: 155.8376 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 1, கொழும்புத் துறைமுகம் அத்துடன் சைத்திய வீதி

கிழக்கில் - காணித்துண்டம் இல.1, கொழும்புத் துறைமுகம், சைத்திய வீதி, இந்து சமுத்திரம் மற்றும் காணித்துண்டு இல. 7

தெற்கில் - இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 7, 6 மற்றும் 3

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 6, 3 மற்றும் 6

2. **காணித் துண்டு இல. 3 : பரப்பளவு : 15.0933 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டம் இல. 2

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 6

தெற்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 4 மற்றும் 6

3. **காணித் துண்டு இல. 4 : பரப்பளவு : 113.5311 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 3

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 3 மற்றும் 6

தெற்கில் - காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6

4. **காணித் துண்டு இல. 5 : பரப்பளவு : 14.7856 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4

தெற்கில் - காணித்துண்டம் இல. 6

மேற்கில் - காணித்துண்டம் இல. 6

5. **காணித் துண்டு இல. 6: பரப்பளவு : 101.1038 ஹெக்.**

வடக்கில் - காணித்துண்டங்கள் இல. 7, 1, 2, 3, 4, 5, 4, 3 மற்றும் 2

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 1, 2, 3, 4, 5, 2 மற்றும் 7

தெற்கில் - காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7

மேற்கில் - காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7

6. **காணித் துண்டு இல. 7 : பரப்பளவு : 46.2639 ஹெக்.**

வடக்கில் - இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 1, 6 மற்றும் 2

கிழக்கில் - காணித்துண்டங்கள் இல. 1, 6 மற்றும் 2 அத்துடன் இந்து சமுத்திரம்

தெற்கில் - இந்து சமுத்திரம்

மேற்கில் - இந்து சமுத்திரம்

* 3.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1) ,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில், அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2) ,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில், அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 7.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

சம்பளச் சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 15 ஆம் திகதிய 2114/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருந்துகள் மீதான விலைகளின் உச்சவரம்பு தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 15 ஆம் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்,— பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ், 1988 யூன் 2 ஆம் திகதிய 508/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதி, உடனடியாக வலுப்பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒப்புதலுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 24 ஆம் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மாச்சு 5 ஆம் திகதிய 2113/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,—* 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 26 ஆம் திகதிய 2116/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,—* இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

*அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,—* விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 26.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

28.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

## 2019 யூலை 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

47/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரை,

(i) இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தற்போது காணப்படுகின்ற வசதியளிப்புக்கள் மற்றும் சட்டங்கள் விதிகள் மூலம் முதலீட்டாளர்கள் ஊக்கத்தை இழக்கின்றனர் என்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(ii) முதலீட்டாளர்களுக்கு மிகத் துரிதமாக சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

94/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய இன்டபோல் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள புலிகள் இயக்கம் சார்பான இயக்கங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி காலகட்டத்தில் குறிப்பிட்ட பட்டியலில் உள்ளடங்கிய புலிப் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை மற்றும் பாதாள உலக கோஷ்டி அங்கத்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரையில் இன்டபோல் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கம் சார்பான அமைப்புக்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 இற்குப் பின்னர் இதுவரையில் இன்டபோல் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ள புலிப் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி அமைப்புகள் மற்றும் பயங்கரவாதிகளை இன்டபோல் பட்டியலில் இருந்து நீக்குவதற்கான காரணம் யாது;

(iv) மேற்படி நீக்குவதற்காக இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதா;

(v) சர்வதேச ரீதியில் புலிகளுக்கு சார்பானவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு இந்த நீக்கமானது ஊக்கமளிப்பதாக அமைவதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

152/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி கழிவு முகாமைத்துவம் எனும் விடயம் மாகாண சபைகளின் கீழ் வரும் ஒரு விடயமாகும் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மாகாண சபைகளின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கென தனியான நிறுவனங்களைத் தாபித்துள்ள மாகாண சபைகள் யாவை;

(iii) அவ்வாறு விசேட நிறுவனங்கள் அமைக்கப்படாதுள்ள மாகாண சபைகள் யாவை;

(iv) அவ்வாறு நிறுவனங்கள் அமைக்கப்படாதுள்ள மாகாண சபைகளில் விசேடமான நிறுவனங்களைத் தாபித்தல் தொடர்பாக உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

270/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மொனராகலை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

369/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான லெவலண்ட் தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

498/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள தனியார் பேருந்து தரிப்பிட சுற்றயலின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் கடந்த அரசாங்கத்தினால் சீசீரீவீ கண்காணிப்பு கமரா தொகுதியொன்றினை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதை அறிவாரா;

(ii) அக்கெமராக்களில் இயங்கக்கூடிய நிலையில் உள்ள கெமராக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இச்செயற்பாட்டின் போது தேவைப்படும் இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாதாந்தம் செலுத்தப்படுகின்ற பணத் தொகை யாதென்பதையும்;

(iv) அண்மையில் கெமராக்கள் செயல் இழந்து இருக்கையிலும் இணையத்தள வசதிகளைப் பெறுவதற்காக பணம் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதையும் அறிவாரா;

(v) இது தொடர்பிலான விபரமான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

576/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) என்டி லெகோ பிரைவட் லிமிடெட் (Ante Leco (Pvt) Ltd.) கம்பனி தொடர்பில் அரசாங்கத்துக்கு உள்ள உரிமை யாது;

(ii) மேற்படி கம்பனி ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் யாது;

(iii) ஆரம்பம் முதல் கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் மானிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி கம்பனியின் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(v) ஆரம்பம் முதல் குறிப்பிட்ட கம்பனி அடைந்துள்ள இலாபம் அல்லது நட்டம் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

608/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான,

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை;

(iii) கைத்தொழில்பேட்டைகளில் இயங்கிவருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில்புரிகின்றவர்களின் எண்ணிக்கை;

என்பவற்றை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மத்திய மாகாணத்திற்காக,

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் ;

(ii) மேற்படி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட இடங்கள்;

(iii) வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள்;

(iv) நன்மைபெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை;

(v) மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள்;

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நிகழ்காலத்தில் இணையத்தளத்தின் ஊடாக இலத்திரனியல் தொழில்முயற்சிகளை மேற்கொள்ளும் ஆற்றல் கிராமிய பிரதேசங்களில் வசிக்கின்ற ஆட்களுக்கும் திறந்ததாக உள்ளபோதிலும் அதற்கு அவசியமான அறிவு போதுமான அளவில் வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) இந்த அறிவினை முறைசார்ந்தவகையில் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

659/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான, கந்தளாய் நகரில் அமைந்துள்ள, இன்றளவில் வருடாந்த குத்தகை அடிப்படையில் வியாபார நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்ற மற்றும் தங்கிக் குடியிருக்கின்ற இடங்களுக்கான குத்தகை உடன்படிக்கைகளை சிலர் இதுவரை நீடிக்கவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கந்தளாய் நகரில் அவ்வாறு குத்தகை அடிப்படையில் உள்ள ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவர்களில் வருடாந்த குத்தகை உடன்படிக்கையினை நீடிப்பு செய்து கொள்ளாத ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அவ்வாறு குத்தகை உடன்படிக்கைகளை நீடிப்புச் செய்து கொள்ளாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

688/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொழும்பு, காலி, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களின் தேசிய பாடசாலைகளின்;

(i) 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி யாதென்பதையும்;

(ii) புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 6 ஆம் ஆண்டுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 5 மற்றும் 6 ஆம் ஆண்டுகளின் சமாந்தர வகுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 6 ஆம் ஆண்டுக்கு புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படாத ஆரம்பப் பிரிவிலிருந்து வந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 6 ஆம் ஆண்டு மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்ந்துள்ள மாணவர்களின் வீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

773/ '19

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டப்பின் படிப்பு பாடநெறியை கற்பதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு 2016 ஆம் ஆண்டு சனவரி முதல் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள கடன் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(ii) இக்கடனுக்கு அறவிடப்படுகின்ற வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கடன் தொகையை மீளச் செலுத்தி முடிவுறுத்துவதற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சக் கால எல்லை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கடன் தொகை வழங்கும் போது சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் வைத்துக் கொள்கின்ற பிணையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையும் வட்டியும் எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை அறவிடப்பட வேண்டிய ஆனால் இதுவரை அறவிடப்படாத கடன் தொகையை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவையென்பதையும்;

(iii) இந்நடவடிக்கை தொடர்பாக திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

861/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் வீடுகளை அமைத்துக்கொள்வதற்கென காணி அற்ற 6,579 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொள்ள காணி வழங்கும் பொருட்டு அரச பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணிகளிலிருந்து தேவையான நிலத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) இன்றேல், அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள மாற்று நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

950/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களை புனித மக்கா நகருக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு முகவர் நிறுவனங்களைத் தெரிவுசெய்யும்போது கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறை யாது;

(ii) அதற்கென விண்ணப்பித்த நபர்கள் /நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வொரு நிறுவனம் / நபருக்கென நேர்முகப் பரீட்சைக்கு மேலதிகமாக எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய நபர்கள் / நிறுவனங்கள் ஒவ்வோராண்டிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள் / நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி நபர்கள் / நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட பங்கு யாது என்பதையும்;

(vii) அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களில் "IATA" உரிமத்தை வைத்திருக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்த நிறுவனங்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல். ஏன்?

14.

971 / ‘19

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தின் பிரதான நகரமொன்றான கெக்கிராவையும் அதை அண்மித்துள்ள பாரிய பிரதேசத்தையும் உள்ளடக்கியவாறு கடமையாற்றி வருகின்ற கெக்கிராவ பொலிஸ் நிலையம் இது வரை இயங்கி வருவது பழைய கட்டடமொன்றில் என்பதை அறிவாரா?

(ii) இக்காலத்திற்கு பொருத்தமான விதத்தில் மேற்படி பொலிஸ் நிலையத்தை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா; ஆமெனில் நடவடிக்கைகள் யாவை;

(iii) அப்பணியை ஆரம்பிப்பற்கு எதிர்பார்க்கப்படுகின்ற திகதி யாது;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1025/ ’19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 281, 282, 283 மற்றும் 284 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்காக பின்பற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) முன்மொழிவு இலக்கம் 284 இன் பிரகாரம் பிணையங்கள் மற்றும் இலங்கைச் செலாவணி ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்குரியதாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பங்குச் சந்தையின் வளர்ச்சியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நியமச் சுட்டெண்களுக்கமைவாக 2000 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையின் முன்னேற்றம் பற்றிய போக்குகளைக் காட்டுகின்ற அட்டவணையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) தற்போது அசாதாரணமாக வட்டி வீதங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையானது பங்குச் சந்தையின் அபிவிருத்திக்குத் தடையாகக் கருதப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அது தொடர்பாக கொண்டுள்ள கருத்து யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 யூலை 25, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

48/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை எல்லேதொட்ட கிராமத்தில் வசிக்கும் மக்கள் கடுமையான குடிநீர் பிரச்சினைக்கு முகங்கொடுத்து இருக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்தையும்;

(ii) ஆமெனில், அம்மக்களுக்கு தூய்மையான குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

99/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கொலை செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் படி யாது;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுவாரா;

(iii) அவர்களது மனைவி பிள்ளைகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளின் பெறுமதியைக் குறிப்பிடுவாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களது மனைவி, பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அவர்களது விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான கொடுப்பனவுகள் உரிய வகையில் செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு பதவி உயர்வு வழங்காமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் அவர்களது மனைவி பிள்ளைகளது பாதுகாப்பு தொடர்பில் தற்போது காணப்படும் செயன்முறையை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமா;

(ii) ஆமெனில், இது மேற்கொள்ளப்படும் காலகட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் செயன்முறையினை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

153/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கழிவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்ற, அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இந்நிறுவனங்களின் அலுவலர்கள் கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பாக வெளிநாட்டு கற்கைப் பயணங்களை மேற்கொண்டுள்ளனரா;

(iii) ஆமெனில், அவ்வலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் வெளிநாட்டுக் கற்கைகள் பற்றிய விபரங்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கற்கை நடவடிக்கைகளுக்கும் செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) குறிப்பிட்ட கற்கைப் பயணங்களில் கலந்து கொண்ட அலுவலர்களின் அறிவு அமைச்சின் நடவடிக்களுக்காக பயன்படுத்தப்பட்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

370/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2002 ஆம் ஆண்டில், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான லுல்கந்துர தோட்டத்தில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

5.

422/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேக்கர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் Hyrax oil SduBhd கம்பனிக்கு இடையில், உராய்வுநீக்கி எண்ணெய் கலவை நிலையமொன்றை ஆரம்பித்து முன்னெடுப்பது தொடர்பிலான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட திகதி யாது;

(iii) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், உடன்பாடு எட்டப்பட்டுள்ள முதன்மை விடயங்கள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கான உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா:

(v) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கம்பனியானது ஏற்கனவே, இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் கலவை நிலையமொன்றை நிர்மாணித்துள்ளதா;

(vi) உத்தேச உராய்வு நீக்கி எண்ணெய் கலவை நிலையத்துக்கு தேவையான எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்வதற்கான உரிமம் பெறப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

499/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.01 தொடக்கம் 2018.06.30 ஆம் திகதி வரையில் "சிசுசெரிய" பேருந்துச் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை மற்றும் அவை ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதைகள் யாவை;

(ii) அப்பாதைகளில் பயணிக்கின்ற தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) அத் தனியார் பேருந்துகளுக்காக செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையானது தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தியதாக போலியான தகவல்களை சமர்ப்பித்து பணம்பெற்றுக்காண்டுள்ள ஆட்கள் காணப்படின், அவர்களின் பெயர்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

609/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புஸ்ஸல்லாவ நகரத்தில் அமைந்துள்ள பௌத்த மதவழிபாட்டு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மதவழிபாட்டு நிலையங்களின் பெயர்கள் யாவை;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் இற்றைவரை மேற்படி மதவழிபாட்டு நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

8.

619/ '18

கௌரவ மஹிந்தானந்த அழுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கண்டி மாவட்டத்தின், கம்பளை - தொலொஸ்பாகே வீதியை இரு ஓடு பாதைகளாக விரிவாக்கும் பொருட்டு 2012 ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது குருந்துவத்தை தொடக்கம் வெலிகந்த வரையிலான 7 கிலோமீட்டர் தூரம் காப்பற் இடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) 2015 ஜனவரி தொடக்கம் மூன்றரை வருட காலப்பகுதியில் இந்த வீதியில் எதுவித வேலைகளும் இடம்பெறவில்லை என்பதையும்;

ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) பெருமளவிலான வாகனங்களும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பயன்படுத்துகின்ற இந்த வீதியில் 4 கிலோமீட்டர்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

655/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை - கண்டி வீதியின் 6 ஆம் கட்டை தொடக்கம் திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் கிண்ணியா வரை ஓடுகின்ற திருகோணமலை வெளிச்சுற்றுவட்டப் பாதையின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2013.07.18 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 6 ஓட்டப்பாதைகள் வரை அதிகரிக்கக்கூடிய வகையில் 4 ஓடு பாதைகளுடன் இந்த வீதி நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) 2015 சனவரி மாதமாகின்ற வேளையிலும் வீதி வெட்டப்பட்டு சரளைக் கற்கள் இடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரையும் கற்களைப் பரவி காபட் இடுவதற்கு முடியாது போனமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தற்போது நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான ஒப்பந்தகாரர் கம்பனி யாதென்பதையும்;

(iv) இந்த வீதிக்கான நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

774/ '19

கௌரவ இந்திக்க அநுருத்த ஹேரத்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாட்டின் பல மாவட்டங்களில் பேணப்பட்டு வருகின்ற பல நெசவுத்தொழில் நிலையங்கள் தொழில்வாய்ப்புக்கள் பலவற்றை உருவாக்கி தேசிய உற்பத்திக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பு நல்குகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பிரதான நெசவுத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை, துணைக் கிளைகளின் எண்ணிக்கை மற்றும் மனைசார் நிலையங்களின் எண்ணிக்கை என்பன முறையாக எத்தனை என்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்தில் தற்போது மூடப்பட்டுள்ள பிரதான நெசவுத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை, துணை நிலையங்களில் எண்ணிக்கை மற்றும் மனைசார் நிலையங்களின் எண்ணிக்கை என்பன முறையாக எத்தனை என்பதையும்

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட நிலையங்கள் மூடப்படுவதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் மற்றும் காரணிகள் மற்றும் அதன் மூலம் இழக்கப்பட்ட தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி உள்நாட்டுக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காகவும், கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காகவும் 2019 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்மொழிவுகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி முன்மொழிவுகள் தொடர்பாக திருப்தியடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திவுலப்பிட்டிய தொகுதியில் இயங்கி வருகின்ற நெசவுத் தொழில் நிலையங்களின் வருடாந்தப் புரள்வு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களைப் பேணிச் செல்வதனை மேற்பார்வை செய்வதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

813/ '19

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளை நேர்முகப் பரீட்சை மூலம் அரசாங்க நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பதற்காக, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரினால் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்துக்கேற்ப, விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நேர்முகப்பரீட்சைக்காக தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) நேர்முகப் பரீட்சையின் பின்னர், பயிற்சிக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட பயிற்சிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்க்கையில் உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரிகளாக அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளார்களா;

(ii) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்டுள்ள வெளிவாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வெளிவாரி பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்குகையில் சிக்கலான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

864/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டில்,

(i) கொலொன்ன தேயிலை பரிசோதகர் பிரிவின் தொரபனே சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம் மற்றும் தங்பனே சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம்;

(ii) ரக்வானை தேயிலை பரிசோதகர் பிரிவின் ரங் கொவிகந்த சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம் மற்றும் வெரலுகஹ முல சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம்;

(iii) நிவித்தகல தேயிலை பரிசோதகர் பிரிவின் தொம்பகம்மன சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம், வன்னிய வத்த சிறு தேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கம், யக்தெஹிவத்த சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம் மற்றும் ஹொரங்கல சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம்;

(iv) மாதம்பே தேயிலை பரிசோதகர் பிரிவின் அல்பிட்டிய சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம் மற்றும் பிபிலேகம சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம்;

ஆகிய சங்கங்களுக்கு உர மானியம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி சங்கங்களுக்கு 2016 ஆம் ஆண்டில் உர மானியம் வழங்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பத்திரங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

964/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் மஹவ பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான இலக்கம் 205, கஜநெக்கம பிரிவில் அமைந்துள்ள ஹாமுகே வத்த எனும் பெயரில் அழைக்கப்படுகின்ற 23 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணி அரசியல்வாதி ஒருவரினால் 2017 ஆகஸ்ட் 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் நில அளவை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) நில அளவை பணிகளை மேற்கொண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்ட பின்னர் அரச ஊழியர்களுக்கு வீடுகளை கட்டுவதற்கு விநியோகிக்கும் போர்வையில் பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டதென்பதையும்;

(iii) அப்பிரதேசத்தின் மக்கள் அச்செயற்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அக்காணியை பிரித்து ஒதுக்கியமை சட்ட விரோதமானதென சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (i) இல் குறிப்பிடப்பட்ட காணி, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு சொந்தமான காணியா என்பதையும்;

(ii) இது பிறிதொரு அமைச்சிற்கு சாட்டப்பட்ட காணியாயின் அந்த அமைச்சு யாதென்பதையும்;

(iii) இவ்வாறு அரசிற்கு சொந்தமான காணியொன்றை சட்ட விரோதமாக பிரித்து ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இல்லையெனில், எதிர்காலத்தில் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஏதேனுமொரு கருத்திட்டத்திற்காக இக்காணியை பயன்படுத்துவதற்கு திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது எதற்காக என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

972/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ்மா அதிபரின் தலைமையில் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இபலோகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ரணவிரு கிராமத்தில் தாபிக்கப்பட்டுள்ள இபலோகம பொலிஸ் நிலையம் தற்காலிக கட்டடமொன்றில் இயங்கி வருவதை அறிவாரா;

(ii) பொலிஸ் நிலையத்திற்கு பொருத்தமான நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணித்து அங்கு பொலிஸ் நிலையத்தை கொண்டுநடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1026/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய நிதி அமைச்சரின் "100 நாள் புரட்சி" பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- கொடுப்பனவு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்படி நலனை பெற்றுக்கொண்ட கர்ப்பிணி தாய்மாரின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- வீதம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் உறப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட கூற்றின் 7.29 இல் காட்டப்பட்டுள்ளவாறு வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 யூலை 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

51/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற "புரநெகும" கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சுக்கு உரித்தான வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

100/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களைக் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு முதல் உபாதைகளுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் படி யாது;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களில் முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் அளவு யாது;

(iv) கொடுப்பனவுகள் செலுத்தப்படாதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) அவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படாமைக்கான காரணம் யாது;

(vi) முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றனவா;

(vii) மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ள முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்கள் காணப்படுகிறார்களா;

(viii) ஆமெனில், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

154/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை - பண்டாரவளை வீதியில், 2 ஆம் மைல் கல்லின் அருகாமையிலுள்ள பாலம் கடுமையாக சிதைவுற்றுள்ளதை அறிவாரா;

(ii) இப்பாலத்தினூடாக செல்லவேண்டியுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) இப்பாலத்தின் பழமை பாதுகாக்கப்படக் கூடியவாறு நவீனமயப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

371/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மஹவில தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

423/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி தொல்பொருளியல் இடம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி தொல்பொருளியல் இடம் பற்றிய தொல்பொருளியல் மதிப்பாய்வுகள் அல்லது முற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iii) இதுவரை கிடைத்துள்ள தொல்பொருளியல் சார்ந்த விடயங்கள் யாவை;

(iv) அது பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(v) இந்த தொல்பொருளியல் இடத்தின் அழிவுக்கு ஏதுவாக அமையத்தக்க வகையில் அதற்குச் சொந்தமான காணிகளில் எவரேனும் வெளித்தரப்பினர் குடியமர்ந்துள்ளனரா;

(vi) அதற்கிணங்க மேற்படி தொல்பொருளியல் இடத்திற்கு நேர்ந்துள்ள சேதம் பற்றிய முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

(vii) இன்றளவில் இந்த தொல்பொருளியல் இடத்தை பாதுகாக்க மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

504/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திற்குரிய மத்தியம நுவர கம்பலாத்த பிதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் கையளிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) கையளிக்கபட்ட வீடுகளைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரினதும் பெயர், வீட்டு இலக்கம், வீட்டுப்பயனாளி அரச உத்தியோத்தரா, ஓய்வு பெற்ற அரச உத்தயோத்தரா என்பதையும் அறியத்தருவாரா;

(iii) வீடமைப்புத்திட்டமானது பிரதேசத்திலுள்ள காட்டு யானைகள் பயணிக்கும் யானைக் கடவைக்கு தடயேற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(iv) வீட்டுப்பயனாளிகளின் உயிர்ப் பாதுகாப்பு தொடர்பில் யானை வேலியொன்றினை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடமைப்புத் திட்டத்தினை திறந்து வைத்தமை தொடர்பான விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவு செய்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) வீடமைப்புத் திட்டத்தினை திறந்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட நினைவுப் பலகைக்காக செலுத்தப்பட்டுள்ள பணம் எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

577/ ' 19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல், மல்லவபிட்டிய இலங்கை மின்சார சபை அலுவலக வளாகத்தில் பாரிய மின்பிறப்பாக்கி இயந்திரத் தொகுதியொன்று நிறுவப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இந்த இயந்திரங்கள் இயங்கும்போது எழும் அதிக ஒலி காரணமாக சுற்றுப்புறத்திலுள்ள மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த இயந்திரங்களை பொருத்துவதற்கு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், சுற்றாடல் மதிப்பீட்டை மேற்கொண்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இப்பிரச்சினையைத் தீர்க்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

610/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த இரண்டு வருடங்களுள் கண்டி மாவட்டத்தில்,

(i) மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சார்ந்த சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) போதைப்பொருள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(iii) கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி;

வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது தடைசெய்யப்பட்டுள்ள சட்டவிரோத போதைப்பொருள் வகையைச் சேர்ந்த போதைப்பொருள்களாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் அவை கொண்டுவரப்படும் நாடுகள் அடங்கிய பெயர் பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கண்டி மாவட்டத்தில், கம்பளை மற்றும் அண்மிய பிரதேசங்கள் நீண்ட காலமாக போதைப் பொருள்களை விநியோகிக்கும் மத்திய நிலையமாக இயங்கி வருவதையும், பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைத்து இயங்கி வரும் இந்த விநியோக வலையமைப்பு இதுவரையும் பலமான நிலையில் காணப்படுவதையும் அறிவாரா என்பதையும்;

(ii) இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களை விரைவாக சட்டத்தின்முன் நிறுத்தி, அப்பிரதேசத்திலிருந்து போதைப்பொருள்களை ஒழிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

621/ '18

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 250 கோடி ரூபாவினை செலவு செய்து நாவலப்பிட்டி நகர அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியதென்பதையும்;

(ii) அந்த வேலைத்திட்டத்தின் கீழ் நாவலப்பிட்டிய நகருக்குள் பல்வேறு இடங்களில் இயங்கிவந்த வர்த்தக நிலையங்களை வர்த்தமானியில் பிரசுரித்து அமைவிடம் குறிப்பிடப்பட்டதென்பதையும்;

(iii) நகரின் பல்வேறு இடங்களில் காணப்பட்ட மரக்கறி வர்த்தக நிலையங்களின் அமைவிடம் பொதுச் சந்தைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதென்பதையும்;

(iv) நகர சபையினால் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய ஆட்சியாளர்களினால் வர்த்தகர்களிடமிருந்து இலஞ்சம் பெறப்பட்டு நகரின் அனைத்து இடங்களிலும் மரக்கறி மற்றும் பழ விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த நடவடிக்கையை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

656/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கந்தளாய் நகரில் நீர்ப்பாசன இயந்திர வேலைத் தளத்திற்கு அருகாமை தொடக்கம் சம்பத் வங்கி அமைந்துள்ள இடம் வரையில் காணப்படுகின்ற நீர்ப்பாசன திணைக்களத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் சுமார் 40 கடை அறைகள் அமைந்துள்ள போதிலும் நிலத்தின் ஏக உரிமையானது வர்த்தகர்களுக்கு இல்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நிரந்தர நிர்மாணிப்புக்களுடன் வர்த்தக நிலையங்களாக தற்போது அனுபவித்து வருகின்ற மேற்படி காணித் துண்டுகளை நீர்ப்பாசன திணைக்களத்தின் உரிமையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி வியாபாரிகள் இன்று காணப்படுகின்ற நிலைமைக்கு மேற்படி காணித் துண்டுகளை முன்னேற்றியிருப்பது யுத்தம் இடம்பெற்ற கடினமான காலப்பகுதியிலேயே என்பதனால் அக்காணிகளுக்கான வணிகப் பெறுமதியை அவர்களிடமிருந்து அறவிடாமல் அனுபவிப்பினைக் கருத்திற்கொள்ள முடியாதது ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

814/ '19

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டில் இது வரை,

(i) பெற்றோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஒரு லீட்டரின் விற்பனை விலையில் ஏற்பட்ட மாற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு எரிபொருள் லீட்டர் மீதும் விதிக்கப்பட்டுள்ள வரி வகைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி எரிபொருள்களின் ஒரு லீட்டருக்கான செலவினம் யாதென்பதையும்;

(iv) உலக சந்தையின் விலையுடன் ஒப்பிடுகையில் ஒரு லீட்டருக்கான இலாபம்/ நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் ஒவ்வொரு மாதத்திலும் டீசல் மற்றும் பெற்றோல் விற்பனை விலை மாற்றமடையும் விதிமுறை யாதென்பதையும்;

(ii) அதன் மூலமாக அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற இலாபம் மற்றும் நுகர்வோருக்குக் கிடைக்கின்ற அனுகூலங்களும் பிரதிகூலங்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

865/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அளுத்கம, கழுவாமோதர, கம்மெத்த வீதி, இலக்கம் 205 இல் வதியும் திரு.ரீ.பீ.திசாநாயக்க அவர்கள் வலல்லாவிட்ட பிரதேச செயலகப் பிரிவில், துன்தொல கிராம சேவகர் பிரிவில், தோதலு எல்ல, முகலானவில் அமைந்துள்ள மலைப்பாறையினை பல வருடங்களாக கருங்கல் உடைத்தல் தொழில் துறையில் ஈடுபட்டு வந்தார் என்பதையும்;

(ii) இவ்வாறு பலவருடங்களாக கருங்கல் உடைத்தல் தொழில் துறையில் ஈடுபட்டு வந்த போதிலும் அது ஒரு அமைச்சரின் தேவைக்கு ஏற்ப அல்லது சனாதிபதியின் குறிப்பொன்றினால் இக்கைத்தொழில் துறை இடைநிறுத்தப்பட்டதென்பதையும்;

(iii) சனாதிபதிக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மீண்டும் கருங்கல் உடைத்தல் தொழில் துறையை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்குமாறு முன்னாள் காணி ஆணையாளர் நாயகத்திற்கு சனாதிபதியினால் அறிவிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கருங்கல் உடைத்தல் தொழில் துறையை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

963/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கராப்பிட்டிய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமீபத்தில் அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட ஆரச்சிகும்புர எனப்படும் காணியின் பிரதான பங்குதாரராகக் கருதப்படும் காலி, கராப்பிட்டிய, அனகாரிக தர்மபால மாவத்தை, இலக்கம் 87ஏ என்ற முகவரியில் வசிக்கும் திரு ஏ.சீ.எம் ஹசன் என்பவருக்கு குறித்த காணியின் பெறுமதியின்படி இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) இவருக்கு தனது வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய மேற்படி வியாபாரக் காணித் துண்டுக்கு போதிய இழப்பீடு வழங்கத் தவறியுள்ள நிலையில், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணித் துண்டொன்றை அதற்குப் பதிலாக கோரியுள்ளபோதும் இதுவரை அதற்கு பதிலளிக்கப்படாதது ஏன்;

(iii) இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து திரு ஹசனுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

973/ ' 19

கௌரவ இஷாக் ரஹுமான்,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு வழங்கும் வெளிநாட்டு தொழில்களில் ஈடுபட்டுள்ள இலங்கை ஊழியர்கள் மீண்டும் தாய் நாட்டிற்கு வருகைதந்த பின்னர் இவர்களின் பிள்ளைகளுக்கு சிரமமின்றி பாடசாலைகளை பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்முறைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1027/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி அமைச்சரினால் "100 நாள் புரட்சி" பற்றிய பிரகடனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டவாறு விவசாயிகளால் வர்த்தக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 100,000/- வரையிலான கடன் மூலதனத்திலிருந்து 50% வீதம் வெட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விவசாயக் கடன்கள் வெட்டிவிடப்பட்டதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினச் சுமையின் அளவு யாதென்பதையும்;

(iii) கடன் வெட்டிவிடப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியலையும் மேற்படி ஒவ்வொரு விவசாயினது பெயருக்கு முன்னாலும் வெட்டிவிடப்பட்ட கடனின் தொகை குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆவணத்தையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) விவசாயிகளின் வெட்டிவிடப்பட்ட கடன் சார்பாக வர்த்தக வங்கிகளுக்கு அரசாங்கத்தினால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஆகஸ்ட் 06, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

4/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கூரகல தொல்பொருளியல் இடத்தைப் பேணிப்பாதுகாப்பதற்காக அரசாங்கம் இதுவரையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

132/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் "லுணுகல பேசம்வல" எனும் பெயரில் சுற்றுலாத் துறையின் கவனத்தை ஈட்டிக்கொண்டுள்ள பிரதேசமொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) மேற்படி இடமும் அவ்விடத்தைச் சுற்றி அமைந்துள்ள பிரதேசமும் பாரிய சூழல் மாசடைதலுக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடத்தில் நடைபெறும் சுற்றாடல் மாசடைதலை குறைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

206/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் மூலம் மீள்நிரப்பு மதிப்பீடுகள் மற்றும் வேறு மேலதிக நிதி ஒதுக்கங்கள் மூலம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கங்களிலிருந்து வெவ்வேறாக யாவை;

(ii) 2017 ஆம் ஆண்டு அந்த அமைச்சினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு;

(iii) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கங்களிலிருந்து எத்தனை வீதம்;

(iv) மீதியாகவுள்ள நிதி ஏற்பாடுகள் எவ்வளவு;

(v) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கங்களிலிருந்து எத்தனை வீதம்;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல் ஏன்?

4.

319/ '18

கௌரவ சிசிர ஜயகொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு உயிரியல் பாடத் துறையில் க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஒரு வருட காலம் கடந்துள்ளபோதிலும் இதுவரை 5 அலகுகளைக் கொண்ட பாடத்திட்டம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அவைகூட ஆங்கில மொழியில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) புதிய பாடத்திட்டத்திற்காக நடைமுறைப் பரிசோதனைகள் மற்றும் ஆசிரியர் கையேடுகள் வழங்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்போது ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் புதிய பாடத்திட்டம் பற்றிய விழிப்பூட்டல் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) முழுப் பாடத்திட்டத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் என்?

5.

428/ '19

கௌரவ கனக ஹேரத்,— தபால் சேவைகள், முஸ்லிம் சமய விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் கடிதங்களுக்கான தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி தபால் கட்டண அதிகரிப்பு தொடர்பாக பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் ஊடகம் யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

480/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின், தலைமையகம் இயங்குகின்ற கட்டடத்தின் பங்குகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அக் கட்டடத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள சதுர அடியின் அளவு, குத்தகை காலம் மற்றும் குத்தகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள் ஏற்புடைய குத்தகைக் காலத்துக்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை முழுமையாக செலுத்தி முடித்துள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், அது தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

510/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தற்போது இயங்குகின்ற மற்றும் கலைக்கப்பட்டுள்ள மாகாணசபை உறுப்பினர்களில் சிலருக்கு வரிச் சலுகை அடிப்படையிலான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) எனினும், தற்போது இயங்குகின்ற மற்றும் கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் பதவி வகிக்கின்ற மற்றும் பதவி வகிக்காத உறுப்பினர்களின் சிலருக்கு மேற்படி வரி சலுகையுள்ள வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) இதுவரை பதவி வகிக்கின்ற அல்லது பதவி வகிக்காத உறுப்பினர்களில் சிலர் தொடர்ந்து ஐந்து வருட காலம் பதவி வகித்திருப்பதோடு அதில் அதிகமானவர்கள் தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்கள் ஆவர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்கமைய, மாகாண சபை உறுப்பினர்களின் ஒரு பகுதியினர் வரிச் சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கையில் அவ்வனைத்து தகைமைகளையும் பூர்த்திச்செய்துள்ள வேறு உறுப்பினர் சிலருக்கு மேற்படி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமை பாரிய அநீதி என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாகன இறக்குமதி அனுமதி பத்திரம் இதுவரை கிடைக்கப்பெறாத மாகாண சபை உறுப்பினர்களுக்கு மேற்படி அனுமதி பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

517/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டின் முதலாவது போகத்தின் போது மேல் மாகாணத்தில் பயிர் செய்யப்பட்ட மொத்த வயற் காணிகளின் அளவு ஹெக்ரயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேல் மாகாணத்தில் பயிர் செய்யாது தரிசுநிலமாக உள்ள வயற் காணிகளின் அளவு ஹெக்ரயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பயிர் செய்யப்படாத தரிசுநிலமாகவுள்ள வயல்களினால் நாடு இழந்துள்ள நெல் மெற்றிக் தொன்கள் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பயிர் செய்யப்பட்ட போதிலும் சேதமடைந்த வயலின் அளவு ஹெக்ரயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சேதங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு / குறைப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பயிர்செய்கை சேதமடைந்ததன் காரணமாக அநாதரவாகியுள்ள கமக்காரர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பயிர் செய்யப்படாத வயல்களை வேறு பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள அங்கீகாரம் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய சாத்தியக்கூறுக் கற்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கற்கையின் உள்ளடக்கம் யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

544/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட துல்ஹிரிய புடவைத் தொழில்சாலை முதலில் பொம்பே ரெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பின்னர் மேற்படி கம்பனியினால் இது கொரியக் கம்பனியொன்றான காபூல் லங்கா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(iii) காபூல் லங்கா கம்பனியினால் இது வாஸ் கோல்டன் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட போது ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் நட்டஈடு செலுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனம் விற்பனை செய்யப்பட்டிருப்பது ஊழியர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் உட்படவாகும் என்பதையும்;

(v) அச்சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த ஊழியர்களுக்கு, எந்தவொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(vi) இலங்கை முதலீட்டுச் சபை தற்போது இந்த வாசஸ்தலங்களில் வசித்துவருகின்ற ஆட்களை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கும் போது இந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நட்டஈட்டைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் சுமார் 40 வருடங்கள் வசித்துவருகின்ற ஆட்களை மேற்படி வாசஸ்தலங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து வாசஸ்தலங்களின் உரித்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

598/ '18

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக உரிமம் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நபர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போது மணல் தொடர்பாக ஏற்பட்டுள்ள ஏகபோக உரிமையை தடுப்பதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

11.

625/ '18

கௌரவ செஹான் சேமசிங்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் பெயர் என்ன என்பதையும்;

(ii) இவருக்குரிய உத்தியோகபூர்வ வாகனம், எரிபொருள் கொடுப்பனவு, சம்பளம் மற்றும் படிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மொத்தக் கொடுப்பனவு யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக வேறு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை யாது என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுகளுக்காக யாரால் அங்கீகாரம் வழங்கப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

697/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தாழ் நிலங்களை மீட்டல் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தடைசெய்யப்பட்டிருப்பின், அத்தடை எந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டது என்பதையும்;

(ii) இன்றளவில் குறித்த தடை நீக்கப்பட்டிருப்பின், தடை நீக்கப்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.10 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கொழும்பு மாவட்டத்தில் எத்தனை தாழ் நிலங்களை மீட்க அங்கீகாரம் அளித்துள்ளது என்பதையும்;

(iv) மேற்படி அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

763/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பர்பச்சுவல் டிரஷரீஸ் நிறுவனம் செலான் வங்கியில் பேணிவருவதாக கூறப்படும் மென்டிஸ் கம்பனியின் கணக்கின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட சிலருக்கு பணம் வழங்கப்பட்டதாக நிதமும் ஊடகங்களின் செய்திகள் வெளியாவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்கு அமைவாக, பர்பச்சுவல் டிரெஸரீஸ் நிறுவனம், மென்டிஸ் கம்பனியின் பெயரில் செலான் வங்கியில் பேணிவரும் கணக்கிற்கு 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரை வைப்பிலிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இத்தொகை வைப்பிலிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைப்பிலிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரையான காலத்தில் மென்டிஸ் கம்பனியின் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள திகதி, ஒவ்வொரு திகதியில் விடுவிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு மற்றும் இப்பணம் செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

771/ '19

கௌரவ சாந்த பண்டார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் உக்கிர குடிநீர் பிரச்சினை காணப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதான குடிநீர் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) பொல்கஹவெல, பொத்துஹெர, அளவ்வ நீர் கருத்திட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் கீழ் உள்ளடங்கும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

883/ '19

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அதிபர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சையானது 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு மார்ச் 14, 15, 16, 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நியமனங்களுக்கான பெயர்ப் பட்டியல் இச்சபைக்கு சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(vi) அதில் 43 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேல்முறையீட்டு செய்த 1487 இலக்கத்தின் கீழ் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய திருமதி எஸ்.கே.கே. குணத்திலக்க இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவர் இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தவறுதலாக நேர்முகப் பரீட்சைக்கு அவர் அழைக்கப்படவில்லை எனில் அவரை மீண்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 ஆகஸ்ட் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

19/ '18

கௌரவ ஹேசா விதானகே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் ஆரம்பம் தொடக்கம் இற்றைவரை,

(i) ஈடுபடுத்தப்பட்டுள்ள முழுமொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குத் தொகை;

(ii) பங்குகள் மீது பெறப்பட்ட வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது பெறப்பட்ட வருமானம்;

(iii) ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஓர் ஊழியருக்காக செலவிட்ட மொத்தப் பணத்தொகை;

(iv) மீண்டுவரும் அல்லாத செலவுகள்;

(v) வரியாக அரசாங்கத்துக்கு செலுத்திய பணத் தொகை;

(vi) இலாபம் அல்லது நட்டம்;

ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா;

(ஆ) மேற்படி தகவல்கள் தனியார்துறை வங்கி நிறுவனத்துடன் ஒப்பிடப்படுகின்ற போது எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

113/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) ஊவா மாகாணசபையில் இடம்பெற்றுள்ள மற்றும் இடம்பெற்று வருகின்ற முறைகேடுகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் SIN/B/AG/KI/2017/02 இலக்கமும் 2017.04.20 திகதியும் கொண்ட புலனாய்வு அறிக்கை ஒன்று ஊவா மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வறிக்கையில் ஊவா மாகாணசபையின் பிரதான அமைச்சரின் ஆலோசகர்களை நியமித்தல் சம்பந்தமாக வெளிக்கொணரப்பட்டுள்ள, பந்தி இலக்கம் 2 (அ)(i) தொடக்கம் (x) வரையான விடயங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி வெளிக்கொணரல்கள் தொடர்பாக 2 (ஆ) (i) தொடக்கம் (xiii) வரை மேற்கொண்டுள்ள அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

208/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டு யுத்த நிலைமை ஆரம்பிப்பதற்கு முன்னர் வட மாகாணத்தில் காணப்பட்ட இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் (CPC) சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைக்கப்பட்டிருந்த இடங்களின் முகவரிகள் யாவை;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் முகவரிகள் யாவை;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்படும் உரிமையாளர்களில் யுத்த காலத்தில் கொலைசெய்யப்படுதல், காணாமற்போதல் அல்லது மரணமடைதல் காரணமாக மேற்படி நிரப்பு நிலையங்களின் உரிமை கைமாற்றப்பட்டுள்ள உரிமையாளர்கள் யாவர்;

(iv) இதற்குப் பின்னர் மேற்படி நிரப்பு நிலையங்களின் உரிமையைப் பெற்றுக்கொண்ட நபர்கள் மற்றும் அவர்களது முகவரிகள் யாவை;

(v) பின்னுரிமையாளருக்கு அதன் ஆரம்ப உரிமையாளருடன் ஏதேனும் உறவுமுறை காணப்படுமாயின், அதனைக் குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

416/ '19

கௌரவ காமினி லொக்குகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.01.15 ஆம் திகதியில் மத்திய கலாசார நிதியத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) 2015.01.15 தொடக்கம் 2018.05.15 ஆம் திகதி வரை மத்திய கலாசார நிதியத்துக்கு நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆட்சேர்ப்புகள் மத்திய கலாசார நிதியத்தின் ஆளணிக் கட்டுப்பாட்டு திட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்;

(v) 2015.01.15 தொடக்கம் 2018.05.15 ஆம் திகதி வரை மத்திய கலாசார நிதியத்தினால் தொல்லியல் திணைக்களத்துக்கு நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

443/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய் உதவி காணி ஆணையாளர் அலுவலகத்தை அல்லது அதன் ஒரு பகுதியை திருகோணமலை பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு அல்லது வேறு ஓர் இடத்திற்கு கொண்டு செல்லும் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(i) இன்றேல், அங்குள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சகல காணிகளும் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானவை என்பதால், இந்த அலுவலகம் தொடர்ந்தும் மேம்படுத்தப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

474/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தாபனக் கோவையின் 18:2:1 உப பிரிவிற்கமைவாக அரச சேவையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு குழந்தை உயிருடன் பிறக்கும் ஒவ்வொரு பிரசவத்திற்கும் முழுச் சம்பளத்துடன் கூடியதாக அரசாங்கத்தின் 84 வேலை நாட்களை லீவு நாட்களாக பெற்றுக்கொள்வதற்கு உரித்துள்ளது என்பதையும்;

(ii) தாபனக் கோவையின் 18:3:1 உப பிரிவிற்கு அமைவாக பிள்ளையை பராமரிப்பதற்காக 84 நாட்கள் அரைச் சம்பளத்துடன் கூடிய லீவு நாட்கள் உரித்தாக வேண்டும் என்பதையும்;

(iii) தாபனக் கோவையின் 18:4:1 உப பிரிவிற்கு அமைவாக தேவையாயின் மேலும் 84 நாட்கள் சம்பளமற்ற லீவினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும்;

(iv) மேற்படி (i) இன் கீழ் லீவு கணிப்பிடப்படும் போது லீவு நாட்களுக்குரிய சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, மற்றும் அரச லீவு நாட்கள் உள்ளடக்கப்பட கூடாது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆயினும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பட்டதாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பெண் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தின் படி இவர்களுக்கு ஆறு கிழமை பிரசவ லீவு மாத்திரம் கிடைக்கின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) இந்த உத்தியோகத்தர்களுக்கு தாபனக் கோவைக்கு ஏற்ப கிடைக்கவேண்டிய பிரசவ லீவினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

519/ '19

கௌரவ இந்திக்க அநுருந்த ஹேரத்,— பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு உரித்தான மேம்படுத்தப்படாத தொழிநுட்ப கருவி மூலம் துல்லியமான வானிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வது சிக்கலாக அமைந்துள்ளது என்பதை அறிவாரா;

(ii) வளிமண்டலவியல் திணைக்களத்தில் மனித வளப் பற்றாக்குறை காணப்படுகின்றதா;

(iii) ஆமெனில், அது பற்றிய விபரங்களை முன்வைப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு நவீன தொழிநுட்பக் கருவிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருப்பின், அக்கருவிகள் யாவை;

(ii) மேற்படி நவீன கருவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை;

(iii) மேற்படி கருவிகளுக்காக செலவாகும் பணத்தொகை யாது;

(iv) மேற்படி நவீன கருவிகள் கொள்வனவு செய்யப்படும் முறையியல் யாது;

(v) நவீன கருவிகளை வழங்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

677/ '19

கௌரவ எஸ்.சீ. முத்துக்குமாரண,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹ இலுப்பள்ளம விவசாய ஆராய்ச்சி நிறுவனமானது உலர்வலயத்தில் அமைந்துள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு விவசாய செய்கை ஆராய்ச்சி நிலையம் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை அதன் ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையானது ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆராய்ச்சிகள் விவசாய பொருளாதாரத்தின் மீது எவ்வகையில் தாக்கம் ஏற்படுத்துகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 ஆகஸ்ட் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

53/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்ற திகதி தொடக்கம் இற்றைவரை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் "புரநெகும" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் மற்றும் இதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) ஊவா மாகாணத்தில் சுகாதார நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு இக்கருத்திட்டத்தின் கீழ் இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

101/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீதிமன்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.12.31 ஆம் திகதியளவில் நீதிமன்றங்களில் தீர்க்கப்படாது உள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையை நீதிமன்ற வகைப்படுத்தல்களுக்கமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) 5 வருடகாலத்துக்கும் அதிகமாக தீர்க்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 10 வருடங்களுக்கும் அதிகமாக தீர்க்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மிக இலகுவாக தீர்க்கப்பட முடியுமெனினும், நீண்ட காலத்தில் தீர்க்கப்படாதுள்ள வழக்குகளை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

156/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண முதலமைச்சரினால் ஊவா மாகாணத்தின் குறை அபிவிருத்திக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அக்கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை;

(iii) தற்போது இக்கருத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iv) தற்போது மேற்படி ஒவ்வொரு கிராமத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை;

(v) குறித்த கருத்திட்டங்களுக்கான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் ஆகியவற்றை வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா;

(vi) கேள்விப்பத்திரங்கள் வழங்கும்போது கடைப்பிடிக்கப்பட்ட முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

271/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பதுளை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

374/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ரொக்வூட் தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

502/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு சுவீகரிக்கப்பட்டுள்ள நீரேந்து பிரதேசங்களுக்கு உரித்தான காணிகளின் பரப்பளவு யாது;

(ii) அவ்வாறு சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள் விற்பனை செய்யப்பட்டிருப்பின், அதன் பரப்பளவு யாது;

(iii) நாவல, கிரிமண்டல வீதியில் அமைந்துள்ள 41/SLLRDC ஆம் இலக்க வரைபடத்தைக் கொண்ட இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான காணியை விற்பதற்கு முன்னர், நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iv) மேற்படி காணி முந்திய உரிமையாளர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்டதன் அடிப்படை யாது;

(v) காணிகளை சுவீகரிக்கையில் காணி உரிமையாளருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

578/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய மின்வலு உற்பத்திக்கு அரசாங்கத்தினால் சலுகை கடன் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி வீதம் எவ்வளவென்பதையும்;

(iii) இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வங்கியினாலும் வாடிக்கையாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் அக் கடன் தொகையின் முழுமொத்தம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

604/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொதுமக்களுக்கான உதவு தொகை வழங்கப்படுவது எதுவித வருமானமுமற்ற நோயாளர்களுக்கா அல்லது அங்கவீனமுற்ற நிலையில் காணப்படுகின்ற நபர்களுக்கா அல்லது குடும்பங்களுக்கா என்பதனை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எஹெலியகொடை பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 143 பீ நுகதண்ட கிராம சேவகர் பிரிவில் 23 நபர்களுக்கு பொது மக்களுக்கான உதவி தொகை வழங்கப்படுகின்றதென்பதையும், அவர்களுக்கு மத்தியில் 5 பேருக்கு மாதாந்தம் 300/- ரூபாய் வீதமும், ஏனையோருக்கு 250/- ரூபாய் வீதமும் வழங்கப்படுகின்றதென்பதையும் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொகையானது அக்குடும்பங்களுக்கு ஒரு நாள் செலவினத்திற்குக்கூட போதுமானதல்ல என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த உதவியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற பெயரளவிலான கொடுப்பனவுக்குப் பதிலாக 1000/- ரூபாவிலான கொடுப்பனவினையேனும் பெற்றுக்கொடுப்பதற்கு உடன்படுபாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

611/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமாக உள்ள காணிகளின் அளவும் பெயர்களும் வெவ்வேறாக யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கண்டி மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் பல்வேறு கருத்திட்டங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சகல காணிகளினதும் பெயர்கள், அளவு மற்றும் காணி அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் இயங்குநிலையிலுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 03 ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ள, உத்தேச கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரை கருத்திட்டங்களை செயற்படுத்த தவறியுள்ள காணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் குத்தகை அடிப்படையில் கண்டி மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அநேகமான காணிகளில் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாத காரணத்தினால் பயன்மிக்க பணியொன்றுக்கு பயன்படுத்த கூடியதாக இருந்த அக் காணிகள் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இதுவரை கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படாத காணிகளை மீள ஆணைக்குழுவிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

657/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அவர்கள்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய் நகரத்தின் நீர்ப்பாசன எந்திரவியல் வேலைத்தளத்திற்கு அருகில் இருந்து சம்பத் வங்கி அமைந்துள்ள இடம் வரையிலான நீர்ப்பாசன திணைக்களத்துக்குரிய காணியில் வியாபார நிலையங்களை நடாத்திச் செல்லும் நபர்களது பெயர், விலாசம், அந்த ஒவ்வொரு நபர்களாலும் நடாத்திச் செல்லும் வியாபாரங்கள் மற்றும் அவர்கள் அந்த வியாபாரத்தை நடாத்திச் செல்கின்ற காலப்பகுதி என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு வியாபார காணிகளுக்காக வரிகள் அல்லது வேறு ஏதேனும் அறவீடு மேற்கொள்ளப்படுவதாயின், அது எவ்வாறென்பதையும்;

(iii) அந்த அறவீடுகளை மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

750/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1948 தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் குடியிருந்து இந்நாட்டில் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள அண்மைக்கால இந்திய வம்சாவளியைக் கொண்ட (Recent Indian Origin) நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் எத்தனை என்பதையும்;

(ii) 1948 தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரை சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய பிரஜாவுரிமையைப் பெற்று அல்லது பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவை நோக்கிச் சென்ற இந்நாட்டில் குடியிருந்த அண்மைக்கால இந்திய வம்சாவளியைக் கொண்ட நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் எத்தனை என்பதையும்;

(iii) 1948 தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரை இலங்கையில் குடியிருந்து இலங்கை பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்ட இந்தியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) 1948 தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரை இலங்கையில் குடியிருந்து இந்திய பிரஜா உரிமையைப் பெற்றுக்கொண்டு அல்லது பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவுக்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

775/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் அரசாங்க நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக அடையாளம் காணப்பட்ட தொழில்வாண்மைத் தகைமைகளைக்கொண்ட பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) ஒவ்வொரு துறையிலும் நிர்மாணிப்புகளை மேற்கொள்ள மேற்படி ஒப்பந்தக்காரர்களிடம் இருக்கவேண்டிய அடிப்படை தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை;

(iii) அரசாங்க நிர்மாணிப்புகளுக்காக 2018 ஆம் ஆண்டில் அரசாங்க நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தியுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவு;

(iv) அரசாங்க நிர்மாணிப்புகளுக்காக 2018 ஆம் ஆண்டுக்காக அரசாங்க நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த எஞ்சியுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவு;

(v) சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது தாமதித்ததன் மூலமாக அத் துறைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கடுமையான நிதி வசதியீனத்திற்கு இலக்காகின்றனரென்பதையும்; அதன்காரணமாக அவர்களின் தொழில்முயற்சி நடவடிக்கைகள் சீரழிதல் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றதென்பதையும் ஏற்றுக்கொள்கிறாரா;

(vi) சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மேற்படி நிலுவைத் தொகைகள் செலுத்தப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

837/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு, நிரமாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் திரைப்படங்களை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்று செயற்படுத்துகின்றதா என்பதையும்;

(ii) அதற்கமைய பாதுகாக்கப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரிவின் அலுவலருக்கு மற்றும் ஊழியர்களுக்கு திரைப்படங்களை பாதுகாப்பது தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், வெளிநாட்டுப் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்ற நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) கடந்த காலத்தில் வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர்இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

880/ '19

கௌரவ எஸ். சீ. முத்துகுமாரண,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வருடாந்த நுகர்வுக்காக தேவைப்படும் செத்தல் மிளகாயின் அளவு யாது;

(ii) அந்த அளவு நிறைவு செய்யப்படும் விதம் யாது;

(iii) உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து மட்டும் தேவையான மிளகாயின் அளவினைப் பெற்றுக்கொள்ள முடியாதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) 2013 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தேசிய அளவில் பயிரிடப்பட்ட மிளகாயின் அளவு ஓவ்வோராண்டு ரீதியாக தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை சந்தைக்கு அனுப்பப்பட்ட உள்நாட்டு செத்தல் மிளகாயின் அளவு ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் வழங்கலில் வீழ்ச்சி அல்லது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) வீழ்ச்சி ஏற்பட்டிருப்பின், வழங்கலை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) அதிகரிப்பு ஏற்பட்டிருப்பின், அதை மேலும் விருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

967/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் திணைக்களத்தினால் "அனுசரணை நிதியம்" எனும் பெயரில் நிதியமொன்று பேணப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்துக்கு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகை அறவிடப்பட்டதென்பதையும்;

(iii) கண்டி, அம்பிடிய, கல்தென்ன வீதி, 08 ஆம் இலக்க விலாசத்தில் வசிக்கும் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் திரு டபி. எச். எம் கருணாதிலக்க பண்டா 07 ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வு பெறுகையில் இந் நிதியத்திலுள்ள தமக்குரிய தொகையை கோரி விண்ணப்பித்து அதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ள போதிலும், இது வரை அத்தொகை செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு கருணாதிலக்க பண்டாவிடமிருந்து அறவிடப்பட்ட ரூ. 12,328/- தொகையினை இவருக்கு மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்ட இத் தொகைக்கு வட்டித் தொகை செலுத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்பொழுதுசெலுத்தப்படும் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2019 ஆகஸ்ட் 09, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

45/ '18

கௌரவ ஹேஷா வித்தானகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் இறுதியாக எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்தினத்தில் கொலொன்னாவையிலிருந்தும் முத்துராஜவெல பெருங் களஞ்சிய தொகுதியிலிருந்தும் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட பவுசர்களின் எண்ணிக்கை மற்றும் எரிபொருளின் அளவு என்பன தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) அவ்வாறு குறைந்த விலைக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டதன் காரணமாக அன்றைய தினத்தில் மட்டும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்ட மேற்படி சம்பவம் தொடர்பாக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

103/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை தோட்டங்கள் தரப்படுத்தலின் கீழ் பிரிக்கப்பட்டுள்ள வகுதிகள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வகுதியின் மூலமும் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை என்பதையும்;

(iii) தேயிலைத் தோட்டங்களுக்கு ஏற்புடைய காணிகள் வேறு கருத்திட்டங்களுக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஏற்புடைய காணிகளை பெறுகின்ற தனியார் தொழில்முயற்சியாளர்களின் விபரங்கள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) வேறு கருத்திட்டங்களுக்கு வழங்குவதற்கு உத்தேச ஆற்று நீரேந்து பிரதேசங்களில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) பாதுகாக்கப்பட்ட சூழல் வலயங்களில் அமைந்துள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) வேறு கருத்திட்டங்களுக்கு தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசித்துள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள தேயிலைத் தோட்டங்கள் நட்டமடைவதற்கு காரணங்கள் யாவை என்பதையும்;

(v) நிருவாகக் குறைபாடுகள் காரணமாக மேற்படி தேயிலைத் தோட்டங்கள் நஷ்டமடையுமானால், உரிய நிருவாகத்தின் கீழ் அவற்றை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்கான சாத்தியம் இல்லையா என்பதையும்;

(vi) ஆமெனில், வேறு நடவடிக்கைகளுக்கு வழங்காமல் தேயிலைச் செய்கையையே மேற்கொள்வது சூழல்நேயமிக்கது அல்லவா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

157/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமாக உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்தும் கிடைக்கப்பெற்ற வருமானம், வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) எதிர்வரும்காலத்தில், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமாக இருக்கின்ற எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

272/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு, மொனராகலை மாவட்டத்தில், படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கட்டுகஹகல்லே குளத்தை புனரமைப்பதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) அதற்கான சுற்றாடல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி சுற்றாடல் ஆய்வறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இந்த கருத்திட்டத்திற்கேதுவான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மறுசீரமைப்பு பணிகள் யாவையென்பதையும்;

(v) சம்பந்தப்பட்ட மதிப்பீட்டின் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) இப்புனரமைப்பின்போது குளத்தின் ஆழத்தையும் பரப்பளவையும் அதிகரிப்பதற்காக குளத்தின் அடிப்புறத்திலுள்ள மண்படுகை அகற்றும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vii) மேற்படி மண்படுகை அகற்றப்பட்ட முறை மற்றும் அவை வெளியே குவிக்கப்பட்ட இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

375/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹோப் தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

473/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டியமைக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கின்ற பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. நாலக்க சில்வா தனது சேவைக் காலத்தில் தவறான நடத்தை அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தால் அந்தச் சம்பவம், திகதி, மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று அல்லது ஏனைய சட்டரீதியான நடவடிக்கைகளின் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் நிழற் பிரதிகளை வழங்குவாரா என்பதையும்;

(ii) பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபராக அவர் ஆற்றிய சேவைகளின் துல்லியமான தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை பற்றி திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

(iii) நாட்டின் தலைவருக்கும் பயங்கரவாதத்தை அழித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும் எதிரான சதித்திட்டம் தொடர்பானதொரு முறைப்பாடு என்பதால் அந்த உத்தியோகத்தரை கட்டாய லீவில் அனுப்புவதின் மூலம் மாத்திரம் நியாயமான விசாரணையொன்று இடம்பெறுமென திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

503/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2017 வரையில் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையில் பங்கேற்ற முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அமைதிப்படை பணிகளுக்காக தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரை தேவையென பாதுகாப்பு அமைச்சு கட்டளை பிறப்பித்துள்ளதா;

(iii) உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு விதப்புரை செய்வதற்கான மிகச் சிறந்த நிறுவனங்கள் காணப்படுகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதை பொறுப்பளித்ததன் பின்னணி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 முதல் இதுவரையில் முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களது தடைநீக்கச் சான்றிதழ் வழங்குவதற்காக ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஆவணக்கோவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) தற்போது அமைதிப்படைப் பணிகளில் பங்கேற்போர்களது எண்ணிக்கை விரைவாக குறைந்துள்ளதை அறிவாரா;

(iii) இதற்கான காரணம் யாது;

(iv) 2018 மார்ச் மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள 400 ஆவணக்கோவைகளில் இதுவரையில் 07 ஆவணக் கோவைகளுக்கு மாத்திரமே தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

579/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையினால் மதஸ்தலங்களுக்கு சூரிய மின்வலுத் தொகுதிகளை வழங்கும் கருத்திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள மதஸ்தலங்களின் எண்ணிக்கை யாது;

(ii) ஒவ்வொரு மதஸ்தலத்திற்கும் வழங்கப்பட்டுள்ள மின்வலு முறைமையின் இயலளவை வெவ்வேறாக முன்வைப்பாரா;

(iii) 2017.06.01 ஆம் திகதியளவில் மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை யாது;

(iv) மேற்படி மின்வலு தொகுதிகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு யாது;

(v) மதஸ்தலங்களுக்கு சூரிய மின்வலு தொகுதிகளை இலவசமாக வழங்குவதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

605/ ' 18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில் துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை அல்லது அதன் முகவர் நிறுவனங்களினால் துண்டிக்கப்பட்ட மின் வழங்கலை மீண்டும் இணைப்பதற்கு ரூபா 1300/- தொகை அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) கடந்த ஒராண்டுக்கு முன்னர் இக்கட்டணம் ரூபா 500/- ஆக காணப்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இக்கட்டணத்தை அதிகரிப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அதிகரிக்கப்பட்ட கட்டணத்தைக் கணிப்பிட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) மின்சாரப் பட்டியலில் நிலுவை காணப்படும் போது அதனை தவணைக் கட்டணமாகச் செலுத்துவதற்கு இடமளிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரையில் மின்சார கட்டணம் செலுத்தாமையினால் மின் வழங்கல் துண்டிக்கப்பட்ட வீடுகள்/இடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

614/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், உலப்பனை, மொரகொல்ல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் நீர்மின் நிலையத்தின் பிரதான அணைக்கட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(iii) மீள்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(v) மீள்குடியமர்த்தும் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நிர்மாணிக்கப்படும் நீர்மின் நிலையங்களில் மேற்குறிப்பிட்ட மின்நிலையக் கருத்திட்டமானது, மொரகஹகந்த நீர்ப்பாசன கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் நீர்மின் நிலையத்துக்கு மாத்திரம் இரண்டாவதாகக் கருதப்படுவதாகவும்;

(ii) சுமார் 30 மெகாவோட் கொள்ளளவினைக் கொண்டுள்ள இந்த மின் நிலையமானது ஒரு வருடத்தில் தேசிய மின்வலுத் தொகுதுக்கு சுமார் 100 மில்லியன் மின்அலகுகளை சேர்த்துக்கொண்டு, மின் பாவனையாளர்களுக்கு கணிசமான பணிகளை ஆற்றுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி கருத்திட்டத்தின் பணிகளை துரிதப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

751/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.07.01 தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை பிரதம அமைச்சர் கலந்து கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு விஜயத்திலும் பங்கேற்ற நபர்களின் பெயர்கள், அவர்கள் அரச பதவி வகிக்கும் பட்சத்தில் அப்பதவிகள் மற்றும் விஜயத்தில் பங்கேற்றமைக்கான காரணம் என்பன யாவை என்பதையும்;

(iii) 2016.01.01 தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை பிரதம அமைச்சர் பங்கேற்ற வெளிநாட்டு விஜயங்களின் பொருட்டு அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் உட்பட ஒவ்வொரு விஜயத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

776/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடதங்களுக்காக செலவாகிய இறக்குமதிக் கிரயம் ஒவ்வொரு வருடத்தின் படி எவ்வளவு;

(ii) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடதங்களுக்காக செலவாகிய கிரயம் ஒவ்வொரு வருடத்தின் படி எவ்வளவு;

(iii) உள்நாட்டு வழங்கலாளர்களிடமிருந்து ஔடதங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்கையில் கடைப்பிடிக்கப்படுகின்ற கேள்வி நடைமுறை, முறைசார்ந்ததென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iv) ஆமெனில் 2018 ஆம் ஆண்டில் உள்நாட்டு ரீதியாக வழங்கல்களை மேற்கொண்ட கம்பெனிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்படுகின்ற ஔடதங்கள் பாவனைக்கு பொருத்தமற்ற அல்லது உரிய தரமற்றவையா என்பது பரிசோதிக்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அவ்விதமாக இனங்காணப்பட்ட ஔடதங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதிக் கிரயம் எவ்வளவு;

(iii) உரிய தரமற்ற ஔடதங்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு நோயாளிகளின் பாவனைக்கு கிடைக்கின்றமை பாரதூரமான சுகாதார சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

881/ '19

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் உள்நாட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியின் பொற்காலமாக கருதப்படுவது காலஞ்சென்ற பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களது யுகம் என்பதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) மிளகாய் செய்கையாளர்கள் மிளகாய் செய்கையிலிருந்து விலகுவதன் காரணமாக செத்தல் மிளகாய் உற்பத்தியானது கடுமையான வீழ்ச்சி அடைந்துள்ளதென்பதனை ஏற்றுக்கொள்வாரா;

(iii) அனுராதபுரம் மாவட்டத்தில் மிளகாய் பயிர்ச் செய்கையை மீளவும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

974/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாரிய பிரதேசமொன்றின் வழக்கு நடவடிக்கைகளை உள்வாங்குகின்ற மெதவச்சி நீதவான் நீதிமன்றமானது தற்போது மிகவும் பழைமைவாய்ந்த பழுதடைந்த நிலையிலுள்ள கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நீதிமன்றக் கட்டிடங்களை நவீனமயப்படுத்துவதற்கு அல்லது புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1009'/19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஏப்ரல் மாத்தில், இலங்கை விமானப் படையினால் ரேடார் ரிசீவரொன்றும் அன்டெனா ஸ்கேனரொன்றும் பழுதுபார்ப்பதற்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அப் பொருட்கள் காணாமல் போயுள்ளதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அப்பொருட்களை ஏற்றி இறக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அந் நிறுவனம் இன்னும் இலங்கையின் யாதேனுமொரு அரச நிறுவனத்துக்கு சேவைகளை வழங்குகின்றதா என்பதையும்;

(v) அப்பொருட்கள் காணாமல் போனதால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா.11/' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 12/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 13/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற இலங்கை பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 14/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 15/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா.16/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 17/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 18/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 19/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 20/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 21/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச் சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 22/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 23/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா. 24/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 25/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றைப் புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 26/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 27/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா. 28/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா. 29/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 30/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற 'பற்றரி கேஜ்' முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற பற்றரி கேஜ் முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 31/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 32/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருநாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா.33/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது ஊழியர் சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 34/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோய் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 35/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 36/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகப்படியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

27.

பா. 37/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா. 38/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 39/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8,394 குடும்பங்கள் பாரிய நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 40/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 41/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 42/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 43/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா. 44/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 45/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 46/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 47/ '19

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 49/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வெற்றிலை செய்கையை மேம்படுத்தல்,— கம்பஹா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற அனேகமானவர்களின் வாழ்வாதாரமாகிய வெற்றிலை செய்கையானது நாட்டுக்கு அந்நியசெலாவனியை ஈட்டித் தருகின்ற விவசாயப் பயிர் என்பதோடு, இலங்கையிலிருந்து வெற்றிலையை கொள்வனவு செய்கின்ற பிரதான நாடொன்றாகிய பாகிஸ்தான் அண்மையில் அந்நாட்டுக்கு இறக்குமதி செய்கின்ற வெற்றிலைக்கு விதித்துள்ள வரி காரணமாகவும், உள்நாட்டு பயிர்ச்செய்கைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற பல விடயங்கள் காரணமாகவும், உள்நாட்டில் வெற்றிலை விலை மிகவும் குறைந்துள்ள பின்னணியில் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளும் ஒழுங்கீனமாகியுள்ளதாலும் இத்தகைய நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலை செய்கையாளர்களை மேம்படுத்தவும், தேவையான இறக்குமதி திசைகளை கண்டறிவதற்கும் அவசியமாகின்ற அரசாங்கத்தின் தலையீட்டை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதன் மூலமாக வெற்றிலை செய்கையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 50/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்ட பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவித்தல்,— நாட்டில் இயங்கும் வர்த்தக வங்கிகளினால் நாட்டின் பிரசைகளுக்கு பல்வேறு தேவைகளுக்காக கடன் வழங்கும் போது ஆதனப் பிணைகளும் தனிநபர் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இவ்விடயத்தில் பிணையாளி கடன்பெறுனருக்கு உதவியாக அதைச் செய்தாலும் ஏதேனும் காரணத்தால் அவ்வாறான கடனாளிகள் கடனை மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடனாளி உள்ளிட்ட பிணையாளிகளின் பெயர்களும் கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்படுவதால் பிணையாளிக்கு பாரிய அநீதி ஏற்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் சார்ந்த பிரச்சினை தீர்க்கப்படும் வரை பிணையாளிக்கு வங்கிக் கடனொன்றை பெற்றுக்கொள்ள இயலாத நிலையொன்று ஏற்படுவது மாத்திரமின்றி புதிய தொழில்முயற்சியாளர்கள் உருவாகுவதற்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் பாதகமான முறையில் தாக்கம் ஏற்படுவதால் பிணையாளிகள் சார்பாக நெகிழ்ச்சிமிக்கதொரு கொள்கையினை பின்பற்றி கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்டுள்ள பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 51/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் உயர்கல்வி நிறுவனங்களை உயர் தரத்துடன் பேணிச் செல்லும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்,— இலங்கையில் பல தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் தாபிக்கப்படும் போக்கு காணப்படுவதோடு முறையான கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உதவியளிப்பதனால் தனியார் கல்வி நிறுவனங்களின் உருவாக்கமானது பல துறைகளில் நாட்டிற்கு சாதகமாக அமைகின்ற போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுத்தரப்படுகின்ற சேவைக்குரிய தரம் பேணப்படுகின்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடன்கூடியதாக பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம் என்பதனால் அனுபவம் வாய்ந்த புத்தி ஜீவிகளினதும் கல்வியியலாளர்களினதும் தலைமீட்டின் கீழ் உரிய பாடநெறிகளுக்கான உள்ளடக்கத்தினை ஆராய்ந்து தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற சேவையினை உயர் தரத்துடன் பேணிச்செல்வதற்காக தற்போது காணப்படுகின்ற சட்ட முறைமையானது பலம் பொருந்தியதாக அமையவில்லை என்பதால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினை துரிதமாகத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 52/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் நிதி நிறுவனங்களைப் பேணிச் செல்வதற்கு ஏற்புடைய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக பண வைப்பாளர்களைப் பாதுகாத்தல்,— தனியார் நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்யும்போது பண வைப்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் தோன்றுவதாலும், பண வைப்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கம்பனிகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய சட்ட ஏற்பாடுகள் இன்மையாலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் திருத்தங்களையும், வலுவிழந்த சட்டத்தைப் பலப்படுத்தும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு, அதற்கு உதவியாக 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 19 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக நாட்டினுள் பலம் வாய்ந்த நிதிப் பிரிவொன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா.53 / ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— உரிய தரத்தைக் கொண்ட சிறு ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்தல்,— சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி உரிய தரமின்றி மேற்கொள்ளப்படுவதால் பயிர்செய்கையாளர்களுக்கும் நாட்டுக்கும் பாதகமான தாக்கம் ஏற்படுவதோடு, அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு ஏற்றுமதிகளை அதிகரிப்பது உந்துசக்தியாக உள்ள போதிலும் இலங்கையின் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு சர்வதேசத்தில் காணப்பட்ட நற்பெயர், கொறக்கா புளிக்கு யூரியா கலத்தல் போன்ற மோசடியான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு நிலவிய சர்வதேச கேள்வி குறைந்துள்ளதால் உள்நாட்டு விலையும் குறைந்துள்ள பின்னணியில் இந் நிலைமையினை உடனடியாக மாற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களின் தரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா. 54/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தொழில் முயற்சி வங்கி முறையை அறிமுகம் செய்தல் மற்றும் தாபித்தல்,— நாடு பூராகவும் அமைந்துள்ள வணிக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி அனுசரணை போதியதாக அமையாமையால், உலகில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் புழக்கத்தில் உள்ள தொழில்முயற்சி வங்கி முறைமையை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் புதிய தொழில்முயற்சியாளர்களின் உருவாக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், புதிய கருத்துக்களுடன் வங்கிக்கு வருகை தரும் இளைய தொழில்முயற்சியாளர்களது தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு நிதி வசதியை மாத்திரமன்றி வர்த்தக அறிவையும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் வழங்குதல் இந்த வங்கி முறைமையிலுள்ள விசேட அம்சமாக காணப்படுவதனாலும், இதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளுடன் தேசிய உற்பத்தியும் அதிகரிப்பதனால் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவியாக அமைவதனாலும் தொழில்முயற்சி வங்கி முறையை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 55/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— ஆயுர்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை கண்காணித்தல்,— நாட்டில் பல இடங்களில் ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் இடங்கள் அதிகளவில் திறக்கப்படும் போக்கு காணப்படுவதுடன் தொழில்முயற்சியாளர்கள் உருவாகுதல் நாட்டிற்கு நன்மைபயப்பதாக காணப்பட்ட போதிலும், இதனால் சமூகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதால், அநேகமான ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் தடுப்பதற்கும் இதன் மூலம் சமூக ரீதியான நன்மைகளுடன் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகாரமுள்ள நிறுவனங்கள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்கள் ஊடாக ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா. 56/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட இனப் பிரிவினர் எதிர்கால சனத்தொகை மதிப்பீட்டின் போது "மலையக தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.— இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ள இந்தியர்கள் "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன் இன்று இவர்கள் "மலையக தமிழ்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இலங்கை பிரசாவுரிமையை பூரணமாக அனுபவித்து வருகின்ற போதிலும் "இந்திய தமிழ்" என்று அவர்களை அடையாளப்படுத்துவதன் மூலம் அவர்களின் இலங்கைப் பிரசாவுரிமை கேள்விக்கு இடமாகின்ற நிலை காணப்படுவதனால், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சனத்தொகை மதிப்பீடுகளின் போது இந்த இனப் பிரிவினரை "மலையக தமிழ்" எனும் தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 57/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்றினைத் தாபித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 58/ ’19

கௌரவ ஜயந்த சமரவீர,— இலங்கையில் தற்போது மிக வேகமாகப் பரவிவரும் ஆக்கிரமிப்பு தாவர வகைகளின் பரவுதலை இல்லாதொழிப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையில் தற்போது ஆக்கிரமிப்பு தாவர வகைகள் பல பரவி வருவதோடு ஒருசில அமைப்புக்கள் மற்றும் நபர்களால் நாட்டில் பாதைகளின் இருமருங்கிலும், மயான பூமிகளிலும் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகிய பொது இடங்களிலும் நாட்டப்பட்ட அக்கேஷியா போன்ற மரங்களினால் தேன் கூட்டங்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் தாவர இனங்களைப் போன்றே உயிரினங்களினதும் வாழ்விற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான ஆக்கிரமிப்பு தாவர வகைகளினது பரவலை தடுத்து முழுமையாக ஒழிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 59/ ’19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறுதோட்ட உரிமையாளர்களாக நியமித்து தொழிலாளர்களுக்கு தோட்டங்களின் உரிமையைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,— இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறைக்கு நீண்டகால வரலாறு காணப்படுவதுடன், கடந்த 25 வருட காலப்பகுதியினுள் ஒயில் பாம் உட்பட புதிய பயிர்ச்செய்கைகள் பெருந்தோட்டத்துறையில் நுழைந்து இருப்பதுடன் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறையின் திறனற்ற முகாமைத்துவம் காரணமாக இத்துறையானது வீழ்ச்சிக்கு உள்ளாகி தொழிலாளர்களுக்கு கூட நம்பிக்கையுடன் தமது தொழில்களில் ஈடுபடுவதற்கான பொருளாதார சமூகச்சூழலொன்று அங்கு காணப்படாமையினால், எமது நாட்டிலே பிரதான ஏற்றுமதி வருமானத்துறையாகிய பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் மயப்படுத்துகையில் இருந்து அகற்றி அரச தலையீட்டின் கீழ் புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைத்து தொழிலாளர்களுக்கு சிறு தோட்டங்களைப் பகிர்ந்தளித்து அவற்றை நிலைபேறாக நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 63/ ’19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— திரைப்படக் கல்லூரியொன்றைத் தாபித்தல்,— இலங்கையின் திரைப்படக் கைத்தொழிலானது தற்போது 70 ஆண்டுகளைக் கடந்திருப்பதோடு சர்வதேச திரைப்பட விழாக்களை வெற்றிபெறக்கூடிய திறமைமிக்க திரைப்படப் பணிப்பாளர்கள், நடிகர், நடிகைகள் உட்பட படைப்பாளிகளை உருவாக்க இலங்கைக்கு முடிந்துள்ள போதிலும், அது ஒரு பாடமாக எதிர்கால சந்ததியினருக்கு முறைப்படி எடுத்துச்செல்ல எமது நாட்டுக்கு இதுவரை திரைப்படக் கல்லூரியொன்று இல்லாமையினால் தொழில்சார் திரைப்படத் துறையொன்றை உருவாக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் திரைப்படக் கல்லூரியொன்று துரிதமாக தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 64/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நவீன கலையரங்கமொன்றை தாபித்தல்,— இலங்கையில் Modern Art எனும் நவீன கலைத்துறையில் ஈடுபடுகின்ற கலைஞர்கள் எமது நாட்டில் இருப்பினும் அவர்களின் கலைப்படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு நவீன கலையரங்கமொன்று இல்லாதுள்ளமை பாரிய குறைபாடாக உள்ளதுடன் அவ்வாறான கலையரங்கமொன்றின் மூலம் எமது சித்திர மற்றும் சிற்பக்கலை உள்ளிட்ட கலைப்பணி களுக்கு ஊட்டமளிக்கப்படுவதுடன், சுற்றுலாக் கைத்தொழிலின் முன்னேற்றமும் இடம்பெறுவதால் அவ்வாறான கலையரங்கமொன்றை (Modern Art Gallery) கொழும்பு நகரைச் சார்ந்ததாகத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா.65/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களை முறையாக வெளியேற்றுதல்,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களாக அறியப்படுகின்ற ஈ-கழிவுப் பொருட்கள் எமது நாட்டுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருவதோடு, இன்றளவில் வருடமொன்றுக்கு சுமார் 92,000 மெற்றிக் தொன் ஈ-கழிவுப் பொருட்கள் பிறப்பிக்கப்படுவதால் 2020 ஆம் ஆண்டளவில் அது 120,000 மெற்றிக் தொன் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு இலத்திரனியல் கழிவு பொருட்கள், அவற்றை வெளியேற்றுதல் மற்றும் அதில் காணப்படும் சுற்றாடல் மற்றும் சுகாதார ரீதியான தீங்குகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கும், இலத்திரனியல் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக முறைசார்ந்ததும் தொடர்ச்சியானதுமான வழிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 66/ '19

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— சர்ச்சைக்குரிய "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சுவீகரித்து "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயர் மாற்றம் செய்தல்,— நாட்டில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள ஹிரா மன்றத்தினால் தொடங்கப்பட்ட "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனம் மற்றும் அந் நிறுவனத்தின் மூலம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இன்றளவில் உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்வதற்கு அங்கீகாரத்தை பெறும் நோக்கத்துடன் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியார் உயர்கல்வி நிறுவனம் சமூகத்தில் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளதோடு இதற்கு காணி வழங்கப்பட்டுள்ள மற்றும் நிதி உதவிகள் கிடைத்துள்ள செயன்முறை உள்ளிட்ட சில செயன்முறைகள் தொடர்பாக எழுந்துள்ள விடயங்களை கருத்தில் கொண்டு ஷரியா பல்கலைக்கழகமாகவும் அறியப்பட்டுள்ள "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தையும் அதனுடன் தொடர்புடைய சகல கட்டடங்களையும் அரசாங்கத்துக்கு சுவீகரித்து அரச பல்கலைக்கழகமாக மாற்றி அதற்கு "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயரிடப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

53.

பா.67/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பயங்கரவாதிகளுடனும் பயங்கரவாத அமைப்புக்களுடனும் தொடர்புபட்டவர்களுக்கு மரண தண்டனையை வழங்குதல் மற்றும் அவர்களின் மொத்த சொத்துக்களையும் பறிமுதல்செய்தல்,— சர்வதேச அல்லது உள்நாட்டு பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள், அத்துடன் பயங்கரவாத அமைப்புகள், செயற்பாட்டாளர்களுடன் நேரடி அல்லது மறைமுகமாக உதவிபுரிகின்ற, துணைபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற ஆட்களின் செயற்பாடுகள் பற்றி நீதிமன்றத்தால் நிரூபிக்கப்பட்டவிடத்து, அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல்செய்து மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

54.

பா. 68/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சகல மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொள்ளல்,— தற்போது முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நாட்டிலுள்ள மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் உடனடியாக கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொண்டு இந்தப் பாடசாலைகளில் ஒரு பாடமாக சிங்கள வரலாற்றைக் கற்பிப்பதற்கும், அப்பாடசாலைகளை கல்வி அமைச்சின் கீழ் கண்காணிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

55.

பா. 69/'19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் மதங்களுக்கமைய மற்றும் இனங்களுக்கமைய வகைப்படுத்தாது கலவன் பாடசாலைகளாக மாற்றியமைத்தல்,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் ஆண்டு முதல் படிப்படியாக கலவன் பாடசாலைகளாக மாற்றுவதற்கும் சிங்களம், தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கம் என்றவாறு பாடசாலைகளைத் தாபிக்க எதிர்காலத்தில் வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு இன அடிப்படையில் குறிப்பிட்ட சதவீதத்தின் கீழ் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

56.

பா. 70/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்தல்,— தற்போது எழுந்துள்ள நிலைமையினை கவனத்திற் கொண்டு இலங்கையில் இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்து தற்போது அவ்வாறு இனத்தினதோ அல்லது சமயத்தினதோ பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளினது பெயர்களையும் மாற்றம் செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

57.

பா. 71/'19

கௌரவ திலங்க சுமதிபால,— "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்து அரச பாதுகாப்பு பலக்லைக்கழகமாக மாற்றுதல்,— உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கையின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக தோன்றியுள்ள பாரதூரமான நிலைமையின் கீழ் குறிப்பாக பெரும்பான்மை சமுதாயத்தினரின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையை உறுதிசெய்வதற்காகவும், இலங்கைக்கு எதிர்காலத்தில் அத்தகைய சந்தர்ப்பமொன்று ஏற்படாதிருக்கவும், குறிப்பாக தீவிரவாத கருத்துடையவர்களிடமிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களைப் போன்றே ஒட்டுமொத்த இலங்கையையும் பாதுகாத்துக்கொள்ளவும், "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்து அரச பாதுகாப்பு பல்கலைக்கழகமொன்றாக மாற்றவேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2019 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

37/ '18

கௌரவ ஹேஷா விதானகே.— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் வண்டி உரிமையாளர் சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதன் அங்கத்தவர்களின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் அவர்களிடமுள்ள பவுசர்களின் இலக்கங்கள் யாவை;

(iii) அண்மையில் இடம்பெற்ற எரிபொருள் விலை ஏற்றத்துக்கு நிகராக அவர்களது போக்குவரத்து கட்டணங்கள் திருத்தப்படாமையால், அச்சங்கத்தின் அங்கத்தவர்கள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதை அறிவாரா;

(iv) ஆமெனில், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் , ஏன்?

2.

68/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் தொல்பொருளியல் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த இடங்களின் பெயர்களை ஒவ்வொரு மாவட்டங்களின் படி குறிப்பிட முடியுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அந்த இடங்களுக்கு 2015 தொடக்கம் சேர்த்துக்கொள்ளப்பட்ட,

(i) நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) அமைய ஊழியர்களின் எண்ணிக்கை;

(iii) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை;

(iv) அமைய ஊழியர்களிலிருந்து நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை;

(v) ஒப்பந்த அடிப்படையிலிருந்த ஊழியர்களில் நிரந்தர சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை;

என்பவற்றை ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இந்த ஆட்சேர்ப்புக்கள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) தற்போதுள்ள ஊழியர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டங்களின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

142/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளுக்கான ஆசிரியர் ஆட்சேர்ப்பு, மாணவர்களிடமிருந்து பணம் அறவிடுதல் போன்ற விடயங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

230/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை, நாவுல போவதென்ன நீர்த்தேக்கத்தை சூழ பாரிய தொட்டாச் சிணுங்கி செடிகள் வியாபித்து வருகின்றன என்பதையும்;

(ii) இதனால், விவசாய மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சிக்கலைத் தீர்த்துவைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

244/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொணறாகலை மாவட்டத்தின் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

341/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தின், மஹாவலி H வலயத்திலுள்ள அனைத்து வயல்களுக்கும் நீர் வழங்குகின்ற கால்வாய்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமைமையினால் நீர் விரயம் ஏற்படும் காரணத்தினால் பயிர்ச்செய்கைக்கு உரிய முறையில் நீர் பெற முடியவில்லை என்பதையும்;

(ii) மேற்படி கால்வாய்கள் உட்பட நீர்ப்பாசன முறைமையை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்கின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

372/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நாகஸ்தென்ன தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

462/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இதுவரை வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வடமேல் மாகாண சபை அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வாறு வெளிநாடு சென்ற அலுவலர்களின் பெயர்கள் மற்றும் பதவிப்பெயர்கள் யாவை;

(iii) அவர்கள் சென்ற நாடுகள் யாவை;

(iv) அதற்காக செலவு செய்யப்பட்ட நிதித் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு அலுவலர்களைத் தெரிவு செய்கையில் வடமேல் மாகாண சபை கடைப்பிடித்த முறையியல் யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

488/ ' 19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை;

(iii) மேற்படி சர்வதேசப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்த்தல், கட்டணம் அறவிடல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

501/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.01 தொடக்கம் 2018.01.31 ஆம் திகதி வரை வழங்குனர்களினால் இலங்கை கடற்படைக்கு விநியோகிக்கப்பட்ட உணவு வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உணவை விநியோகித்த வழங்குனர்களின், உப வழங்குனர்களின், நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து மற்றும் பெறுகை விதிகளுக்கு புறம்பாக செயற்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) பெறுகை குழுவின் அனுமதியின்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணிப்புரை வழங்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொருட்களுக்கு கட்டளை பிறப்பித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) சட்டவிரோதமாக கொள்வனவு செய்தமை காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நட்டத்தை குறிப்பிட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

535/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு வெளிச் சுற்றுவட்ட வீதியை நிர்மாணிக்கும்போது கடுவெல, ரக்கஹவத்த பிரதேசத்தில் களனி ஆற்றின் இடது மற்றும் வலது கரையோரங்களில் சுமார் 4 அடி மண் வெட்டி அகற்றப்பட்டு, கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) ஒவ்வொரு வருடத்திலும் பெரும்பாலும் வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு இலக்காகின்ற ரக்கஹவத்த, ஹேவாகம ஆகிய பிரதேசங்கள் இக்காரணத்தினால் பெரும் வெள்ளப்பெருக்கு அபாயத்துக்கு இலக்காகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆற்றங்கரையோரம் வெட்டப்பட்டதன் காரணத்தினால் கடும் வெள்ளப்பெருக்கு ஆபத்துக்கு உள்ளாவதன் மூலம் பிரதேச மக்களுக்கு நேரிடுகின்ற சேதத்தைத் தடுக்கும் பொருட்டு வெட்டப்பட்ட கரையோரத்தை உரிய நிலைக்கு கொண்டுவருவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

555/ '19

கௌரவ சி. சிறீதரன்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில்,

(i) நிரந்தரமாக வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குரித்தான காணிகள் தொடர்பாகவும் அறிவாரா;

(ii) காணி அறுதியுறுதினைக் கொண்டுள்ள குடும்பங்கள்/ஆட்களின் எண்ணிக்கை யாது;

(iii) காணி அறுதியுறுதினைக் கொண்டுள்ள மேட்டுக் காணிகள் மற்றும் வயற் காணிகளின் எண்ணிக்கை யாது;

(iv) காணி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள குடும்பங்கள்/ ஆட்களின் எண்ணிக்கை யாது;

(v) காணி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள மேட்டுக் காணிகள் மற்றும் வயற் காணிகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வருடங்களுக்கு மேலாக வதியும் மக்களுக்கு இதுவரை காணி அறுதியுறுதி வழங்காமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(ii) யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மக்கள் தமது காணிகளை வங்கி அல்லது ஏனைய நிதி நிறுவனமொன்றில் அடகு வைத்தல், கடன் பெறுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த முடியாத நிலையிலுள்ளனர் என்பதையும்;

(iii) கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரையில் காணி அறுதியுறுதி அல்லது காணி அனுமதிப் பத்திரமோ இல்லாது வசிக்கின்ற குடும்பங்கள்/ ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

563/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த சில மாதங்களில் வடமேல் மாகாணத்தில் கடுமையான வறட்சி நிலவியதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்காலப்பகுதியில் கல்கமுவ தேர்தல் தொகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வறட்சி நிவாரணம் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதியிலிருந்த உலர் உணவுப் பொருட்களின் விலைகள் சந்தை விலையை விடவும் அதிகமென்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அது தொடர்பாக ஆராய்ந்து அவசியமான நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

593/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு இலக்கம் 288 இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குச் சந்தை தரகர்கள் முகம்கொடுத்திருந்த நெருக்கடிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அரசு தலையீடு செய்த முறை யாதென்பதையும்;

(iii) 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையில் செயலாற்றிய தரகர்களின் எண்ணிக்கை, இவர்களின் பிரதேச ரீதியிலான பரம்பல், மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் தரகர் கொடுக்கல் வாங்கல்களின் அளவு ஆகியவற்றைக் காட்டும் ஒரு தரவு அட்டவணையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டினுள் ஒருங்கிணைந்த பங்குச் சந்தை தரகர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

944/ '19

கௌரவ முகமது நசீர்,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரலிருந்து சுமார் 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தெல்தொட்ட நகரத்தில் வதியும் மக்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு கண்டி நகரத்திற்கு வருகை தரும் போது முகம்கொடுக்க நேரிடும் சிரமங்கள் மற்றும் அசௌகரியங்களை போக்கும் நோக்கில் தெல்தொட்ட பிரதேசத்திற்கு நடமாடும் நீதிமன்றமொன்றை தாபிப்பதற்கு பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) அதற்கு மத்திய மாகாண சபையின் கீழுள்ள தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைக் கட்டிடமொன்றை வழங்குவதற்கு மாகாண கல்வி அமைச்சு இணக்கத்தினை தெரிவித்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பாத்தஹேவாஹெட்ட மற்றும் தெல்தொட்ட பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அதனை சுற்றியுள்ள பிரதேசத்திலும் வதியும் மக்களின் நீதிமன்ற நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கான ஆற்றலை கருத்திற்கொண்டு தெல்தொட்ட நகரத்தில் நடமாடும் நீதிமன்றமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 ஆகஸ்ட் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

32/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இதுவரை 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்கு நியமனம் செய்கின்றபோது தற்போது அமுலில் உள்ள முறையியல் யாது என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள்களில் சார்ஜன்ட் பதவிக்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள போதிலும், பதவி உயர்வு கிடைக்காத பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு பதவி உயர்வு வழங்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

75/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் மூலம் குடிவரவு குடியகல்வு செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விமானப் பறப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) விமானக் கம்பனி ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) பெறப்பட்ட வருமானம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நட்டம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த நட்டங்களுக்கான காரணங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

129/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i ) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

212/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியிலிருந்து இன்று வரை அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கென வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வாகனத்தினதும் வகை மற்றும் விலை யாது என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

334/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஏற்கனவே, சமுர்த்தி நிவாரணத்திற்கு தகைமை பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கிடைப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது சம்பந்தமாக கவனம் செலுத்தி, சமுர்த்தி நிவாரணம் வழங்குவதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

354/ ’18

கௌரவ மொஹம்மது நசீர்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கம்பஹா பொலிஸ் நிலையத்தின் 248/177/MOIB ஆம் இலக்க மற்றும் 2017.02.13 ஆம் திகதிய முறைப்பாடு தொடர்பிலான சந்தேக நபருடன், EP-JA-7555 ஆம் இலக்க Toyota Noah வகையிலான மோட்டார் வாகனம், Samsung வகையிலான இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், Nokia வகையிலான ஒரு கையடக்கத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிபத்திரங்கள் சில மற்றும் பணம் அடங்கிய பயணப் பொதியொன்று சிவில் பிரசைகள் சிலரினால் 2017.05.01 ஆம் திகதி களுத்துறை மாவட்ட குற்றவியல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்படி சந்தேக நபர் 2017.05.01 ஆம் திகதி முதல் 2017.05.06 ஆம் திகதி வரை பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அப்போதைய சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் MLO/MO/OUT/147/17 ஆம் இலக்க 2017.08.29 ஆம் திகதிய கடிதம் மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களான தரப்பினருக்கு நியாயம் வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

408/ ’18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 8 வருடங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றியுள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பொலீஸ் பரிசோதகர் பதவி வழங்கப்படுவதாக விடயத்துக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அப்பதவி உயர்வுகள் இதுவரை வழங்கப்படாமையின் காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) எனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அப்பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பதவி உயர்வுகள் வலுவுக்கு வரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

441/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018.09.01 ஆம் திகதியன்றுள்ளவாறு களுத்துறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை, அங்கவீனத்தின் தன்மை, பால்நிலை, அங்கவீன நிலைமையானது பிறப்பின் மூலம் ஏற்பட்டதா அல்லது விபத்தின் மூலம் ஏற்பட்டதா என்பனவற்றை வயதின் அடிப்படையில் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அங்கவீனமுற்ற நபரினதும் பெயர், முகவரி, பொறுப்பாளரின் பெயர், கிராம உத்தியோகத்தர் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) பிரதேச செயலகங்களின் ஊடாக அங்கவீனமுற்ற நபர்கள் பெற்றுக் கொள்ளும் உதவித்தொகையின் அளவு மற்றும் அவர்களின் அங்கவீனத்தின் தன்மை வெவ்வேறாக யாவை யாதென்பதையும்;

(iv) உதவி கிடைக்கவேண்டியிருந்தும் உதவியினைப் பெறாத நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மேற்படி (i v) இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

495/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள மாகாண சபைக்கு சொந்தமான வீதிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த நீளம் எத்தனை கிலோமீற்றர் என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மாகாண சபை நிதியத்தைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள ஏனைய மாகாண சபை வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

515/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் "பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அலுவலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படுவதாயின், அது எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரதும் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பெறுபேறுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

553/ '19

கௌரவ சி. சிறீதரன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சிவில் பாதுகாப்புப் படையணித் திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அத்திணைக்களத்தினால் சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புப் படையணியினால் நடாத்தப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை, சம்பளம் வழங்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியரொருவரின் சம்பளம் என்பன தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) இம் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் சீருடைகளுக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றது என்பதையும்;

(iii) சீருடைகளுக்காக ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கட்டணம் பெற்றோர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(v) இம்மாணவர்களின் சீருடைகளில் சிவில் பாதுகாப்புப் படையணியின் இலச்சினை அச்சிடப்பட்டிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இவ்வாறு பாதுகாப்புப் படையினரால் முன்பள்ளி நடாத்தப்படுவதால் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் ஐக்கியம் ஆகிய விடயங்களில் செல்வாக்குச் செலுத்தமாட்டாதா என்பதையும்;

(ii) வட மாகாண சபைக்குரித்தான இம்முன்பள்ளிகள் சிவில் பாதுகாப்புப் படையணியினால் நடாத்தப்படுவது சட்டபூர்வமானதாகுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

586/ ‘19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 209 இன் பிரகாரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக செல்கின்ற கடல் மார்க்கத்தை வருடாந்தம் 4,500 எண்ணெய்க் கப்பல்கள் உட்பட 35,0000 கப்பல்கள் பயன்படுத்துவதாக குறிப்பிட்டு, ஆழ்கடலில் எண்ணெய் வழங்கும் பணியில் பிரவேசிப்பதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுமென முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவை நடைமுறையில் யதார்த்தமாக்க இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், மேற்படி பணிக்கான உரிமப்பத்திரம் வழங்க வெளிப்படைத் தன்மையுடன்கூடிய விலை கேட்பு முறையியலொன்று பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) அதன் பிரகாரம், ஆழ்கடலில் எண்ணெய் வழங்க உரிமப்பத்திரம் பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

683/ ’18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகையின் (Wet lease) கீழ் விமானமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விமானம் மணித்தியாலமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வொப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதையும்;

(iv) இதற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், கிடைத்துள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குத்தகை முறையின் படி மேலும் விமானங்கள் வழங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், ஒப்பந்தம் செய்வதற்குத் தயாராக இருக்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

694/ ’19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரச கடன் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தலா அரச கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

764/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிர்மாணப் பணிகளுக்காக சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்குச் சொந்தமான மகாவலி கங்கையின் மடன்னட்டி கடவையில் 100 கியூப் மணலை அகழ்வதற்கான உரிமப்பத்திரம் நேரடியாக அத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கையில், உரிமப்பத்திரம் வழங்கப்படக் கூடாத சாபிநகர் இறங்குதுறையிலிருந்து மணலைப் பெற்றுக்கொள்வதற்காக பிற நபரொருவரது பெயரில் C483984 ஆம் இலக்க உரிமப்பத்திரத்தை வழங்குவதற்கான காரணம் யாது;

(ii) சாபிநகர் இறங்குதுறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மணலில் வண்டல் மண் கலந்துள்ளதால் இதனை துப்பரவு செய்ய வேண்டுமென்பதுடன், இந்த இறங்குதுறையிலிருந்து அகழப்பட்ட மணலில் எந்தளவினை தற்போது சிவில் பாதுகாப்பு திணைக்களம் பெற்றுக்கொண்டுள்ளது;

(iii) சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு மணல் வழங்குவதற்காக பிற நபரொருவரை இணைத்துக் கொள்வதற்கான அங்கீகாரம் இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஆகஸ்ட் 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

54/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 500 கிராமிய பாலங்கள் கருத்திட்டம் என்ற பெயரில் கருத்திட்டமொன்று தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக பதுளை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் தற்சமயம் பழுதடைந்துள்ள ஏனைய பாலங்களை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சிடம் உள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

95/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) மத்திய அரசாங்கத்துக்கு சொந்தமான வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் வாயுவை வழங்கும் கம்பனிகள் யாவை;

(ii) இதற்காக மாதாந்தம் செலவிடப்படும் மொத்தப் பணத்தொகை யாது;

(iii) அக்கம்பனிகள் பற்றாக்குறையின்றி குறிப்பிட்ட சேவையினை வைத்தியசாலைகளுக்கு வழங்குகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைகளுக்குச் சொந்தமான வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் வாயுவை வழங்கும் கம்பனிகள் யாவை;

(ii) மாகாண சபைகளுக்குச் சொந்தமான வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் வாயுவை வழங்குவதற்காக மாதாந்தம் செலவிடப்படும் மொத்தப் பணத்தொகை யாது;

(iii) இப்பணத் தொகை பொதுத் திறைசேரியினால் நேரடியாக மாகாணசபைக்கு வழங்கப்படுகின்றதா;

(iv) இதற்காக பொதுத் திறைசேரியினால் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தொகை யாது;

(v) இதற்காக மாகாண வைத்தியசாலைகளுக்கு வருடாந்தம் தேவைப்படும் பணத்தொகை யாது;

(vi) குறிப்பிட்ட பணத்தொகை உரிய காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

155/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக வீடுகளுக்கும் தொழில்முயற்சி இடங்களுக்கும் சேதமேற்பட்டமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகின்ற விடயங்கள் சம்பந்தமாக நிவாரணங்களை வழங்குவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

222/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்ப இவர்களுக்கு பொலிஸ் பரிசோதகர் பதவி வரையிலான பதவியுயர்வுகள் எவ்வளவு காலத்திற்குப் பின்னர் வழங்கப்பட வேண்டும் என்பதையும்;

(iii) இந்த உரிய காலத்தினை பூர்த்திசெய்துள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

273/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் மொனறாகலை மாவட்டத்தின் புத்தள பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள '*ராத்திரி*' வாவியை மறுசீரமைப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சுற்றாடல் மற்றும் பிற அங்கீகாரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்குரிய மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மறுசீரமைப்புப் பணிகள் யாவையென்பதையும்;

(iv) சம்பந்தப்பட்ட மதிப்பீட்டின் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி மறுசீரமைப்பின்போது வாவியின் ஆழம் மற்றும் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதற்காக வாவியின் அடியில் மண் அடுக்குகள் அகற்றப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) மேற்படி மண் அடுக்குகள் அகற்றப்பட்ட விதம் மற்றும் அவை அப்புறப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

361/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானை தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

459/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அண்மையில் கலைக்கப்பட்ட வடமேல் மாகாண முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரின் கீழ் நிருவகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா:

(v) அவ்வாறு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மாகாணசபை பின்பற்றியுள்ள முறையியல் யாது;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

580/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினங்களில் நிலவிய கடும் வறட்சி காரணமாக குருணாகல் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) பாதிப்புக்குள்ளான இக்குடும்பங்கள் பற்றி அறிக்கையிடப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவை;

(iii) வறட்சி காரணமாக பாதிப்புக்குள்ளான மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

606/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலக்கம் 93/2, கண்டி வீதி, யக்கல எனும் முகவரியில் அமைந்துள்ள சிலோன் சோலார் பவர் தனியார் நிறுவனமானது இலங்கை புதுப்பிக்கத்தக்க வலு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனமா அல்லது கறை நிரலில் இடம்பெற்றுள்ள ஒரு நிறுவனமா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பதிவானது இலங்கை புதுப்பிக்கத்தக்க வலு அதிகாரசபையினால் 2017.03.14 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி இடைநிறுத்தத்திற்கான காரணம், குறிப்பிட்ட கம்பனியினால் பொருத்தப்பட்ட சூரிய சக்தி உபகரணங்களின் தரம் குறைவாக இருந்தமையா அல்லது நிறுவனத்தின் உள்வாரியானதொரு காரணமா என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தின் பதிவு இடைநிறுத்தப்பட்டிருக்குமானால் அது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அது தொடர்பில் அதிகாரசபை தலையிடுவதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதிவு இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக அந்நிறுவனத்தில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சுமார் 40 பேர் தொழில்களை இழந்துள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பதிவானது தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருக்குமானால் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளினால் விசாரணைகள் நடத்தப்பட்டு நிறுவனம் குற்றமற்றதெனக் காணப்படின் மீண்டும் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

613/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நல்லாட்சி அரசாங்கம் தொடங்கிய நாள் முதல் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை உதாகம கருத்திட்டத்தின் கீழ்,

(i) ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை;

(iii) செலவிடப்பட்ட முழுத் தொகை;

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அக் கருத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில்,

(i) ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள்;

(iii) நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை;

(iv) செலவிடப்பட்டுள்ள முழுத் தொகை;

எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கண்டி மாவட்டத்தில் எதிர்காலத்தில் வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

753/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் போராட்டத்திற்கு உதவியதன் காரணமாக பாதுகாப்பு வழங்க வேண்டுமென நீதிமன்றக் கட்டளையிட்டுள்ள உண்மையைக் கண்டறிவோர் அமைப்பைச் சேர்ந்த பொறியியலாளர் திரு நிஷாந்த டி. அல்விஸ் என்பவருக்கு இதுவரை பாதுகாப்பு வழங்கப்படாமைக்கான காரணம் யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

777/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "என்றபிரைஸ் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் செயற்படுத்துகையில் கம்பஹா மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட வட்டி சலுகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்துகையில் விசேட கவனம் செலுத்தப்பட்ட துறைகள் யாவையென்பதையும்;

(iii) "என்றபிரைஸ் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி திட்டத்தில் கலந்துக்கொள்வதற்கு கடனுக்காக விண்ணப்பித்துள்ள கம்பஹா மாவட்டத்தின் விண்ணப்பதாரர்கள் ஆண் பெண் இரு பாலாருக்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) 2018 ஆண்டுக்குள் மேற் குறிப்பிட்டுள்ள நபர்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி தேசிய வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

794/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முடிவடையும் போது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமாக இருந்த வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் அரசாங்க அமைச்சுகளுக்கு, திணைக்களங்களுக்கு மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களில் விபத்துக்களுக்குள்ளான வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாகனங்களில் திருத்தப்படாத வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வாகனங்களைப் பாராமரிக்க அதிகாரசபை செலவு செய்துள்ள பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

882/ '19

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படும் சிறு குளங்கள், ஆகாயத் தாமரை “ஜப்பான் ஜக்கோனியா” போன்ற நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பால் துரிதமாக தூர்ந்து வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பு “கட்டியாவ குளம்” போன்ற நடுத்தர அளவிலான குளங்களுக்கும் பரந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பு எதிர்காலத்தில் நெற் செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அது தேசிய ரீதியான ஒரு பிரச்சினையாக மாறுவதற்கான வாய்ப்பு உள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

965/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம், ரத்மல்கஹவெவ, நெலுகொல்லாகடவில் வதியும் ஜனாப் எம்.எம். ஜவுபர் இலங்கை வங்கியின் கஹட்டகஸ்திகிலிய கிளையில் 706863 ஆம் இலக்கமுடைய கணக்கினைத் திறந்து வெளிநாடு சென்று 2006.06.01 தொடக்கம் 2012 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் சம்பாதித்த 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையினை மேற்படி கணக்கில் வரவு வைத்துள்ளார் என்பதையும்;

(ii) 2012 டிசம்பர் மாதம் இலங்கைக்கு வருகை தந்து தனது கணக்கிலுள்ள பணத்தினை மீளப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாப். ஜவுபர் முயற்சித்த வேளையில் சுமார் 50 இலட்சம் ரூபா பணம் மோசடியான வகையில் வங்கியின் நிதி கவுண்டரில் இருந்தும் தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் (ATM) மூலமாகவும் மீளப்பெறப்பட்டிருந்ததாகவும் அது தொடர்பாக உடனடியாக வங்கிக்கு அறிவித்து தமது பணத்தினை மீளப் பெற்றுத் தருமாறு கோரிய போதிலும் இதுவரை பணம் மீளச் செலுத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனாப் ஜவுபர் அவர்களுக்கு இப்பணத்தினையும் அதற்கான வட்டியையும் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) பணம் செலுத்தப்படுமானால் அது எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2019 ஆகஸ்ட் 23, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

55/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சின் கீழ் ஹதபிம அதிகாரசபை என்ற பெயரில் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நிறுவனத்தின் பிரதான கடமைகள் யாவை என்பதையும்;

(iii) தற்சமயம் மேற்படி அலுவலகங்கள் இயங்கிவரும் கட்டிடத்தின் பெயர் மற்றும் முகவரி யாது என்பதையும்;

(iv) இக்கட்டிடத்துக்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவு என்பதையும்;

(v) இந்நிறுவனத்தை கமத்தொழில் அமைச்சு இயங்கும் கட்டிடத்திலேயே கொண்டு நடாத்துவதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் என்னவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

96/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள வீதி நிர்மாணப் பணிகளின்போது சொத்துக்களை இழந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் யாது;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் யாது;

(iii) 2015 முதல் இதுவரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை இழந்தவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நட்டஈடு வழங்கல் தாமதமாகின்றபோது வட்டியுடன் சேர்த்து நட்டஈட்டை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இதுவரையில் வட்டியுடன் சேர்த்து நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா;

(iii) இதன்போது எதிர்பார்க்கப்படும் அளவுகோல்கள் யாவை;

(iv) வட்டி வீதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை யாது;

(ii) எதிர்காலத்தில் நட்ட ஈடு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பயனாளி களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

158/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள மத்திய அரசாங்கத்திற்கு மற்றும் மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்கள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் சாகுபடிசெய்யப்படுகின்ற வயல்களின் பரப்பளவு, பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் சாகுபடிசெய்யப்படுகின்ற வயல்களின் பரப்பளவு, பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மத்திய அரசாங்கமும் மாகாணசபையும், பதுளை மாவட்டத்தில் நீர்ப்பாசனங்களின் பராமரிப்புக்காகவும் புனரமைப்பிற்காகவும் செலவு செய்துள்ள நிதித் தொகை, தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

274/ '18

கௌரவ பத்ம உதயசாந்த,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தில் மொனறாகலை நகருக்கு மேல் அமைந்துள்ள மரகல ஒய மலைத்தொடரைக் கொண்டுள்ள வனம் ஒதுக்குப் பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மரகல ஒய மலைத்தொடரைக் கொண்டுள்ள மேற்படி வனப் பகுதியானது சுற்றாடல் ரீதியில் கூருணர்வுமிக்க வலயமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(v) மரகல ஒய வனத்திற்குரிய காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(vi) இக்கூருணர்வுமிக்க வலயத்தின் அல்லது வன ஒதுக்கத்தின் எல்லைகள் அடையாளமிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) இந்த மலைத் தொடரிலிருந்து ஆரம்பமாகும் நதிகள், சிற்றாறுகள், ஓடைகள் மற்றும் கிளை ஆறுகள் யாவையென்பதையும்;

(viii) கடந்த காலப்பகுதியில் இதன் நீர் மூலமொன்றாகிய "ஜீ லோன்" நீர் ஒதுக்குப் பிரதேசத்திற்கு அருகாமையில் அனுமதியற்ற செயற்பாடுகளின் காரணமாக அருந்துவதற்காக பெறப்படும் நீர்க் கருத்திட்டத்தின் நீர் மாசடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ix) மேற்படி வனப் பகுதியையும் நீர் மூலத்தையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

362/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போப்பிட்டிய தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

527/ '19

கௌரவ சந்திம வீரக்கொடி,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பலாங்கொடை திலக்கபுர, சிறிசுமனகமவில் வதியும் 180 குடும்பங்களுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டு திலக்கபுர சமுதாய அபிவிருத்திச் சங்கத்தினால் சமுதாய நீர்க் கருத்திட்டத்தின் கீழ் நீர்க் குழாய்கள் இடப்பட்டு நீர் தாங்கியும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) 2017 பெப்ரவரி மாதம் இக்கருத்திட்டத்திலிருந்து நீரைப் பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு திலக்கபுர சமுதாய அபிவிருத்திச் சங்கத்தினால் பிரதேசவாழ் மக்களிடமிருந்து ரூபா 10,000/- சேகரித்துக்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி பிரதேசவாழ் மக்களின் கிணற்று நீருடன் மலசலக் கழிவு நீர் கலந்துள்ளதனால் சுகாதார மற்றும் துப்பரவேற்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை மேற்படி நீர் வழங்கல் பெற்றுக்கொடுக்கப்படாதமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இப்பிரதேசவாழ் மக்களுக்கு குழாய் நீர் வசதிகளை தாமதமின்றிப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

635/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு தனியார் நிறுவனங்களுடன் இரகசியமாக உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு அதிகாரம் அளிப்பதற்கு வாய்ப்புள்ளதா என்பதையும்;

(ii) ஆராய்ச்சியொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அதன் பெறுபேறுகளின் பெறுமதியினை தீர்மானிக்க முடியாதென்பதால் ரூ. 100/- போன்ற குறைந்த பட்ச தொகைக்கு அதன் பெறுபேறுகளை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்க முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மொரட்டுவை பல்கலைக்கழக பேரவையினால் கோட் ஜென் எனும் தனியார் நிறுவனத்துடன் செயற்கை அறிவு சார்ந்த ஆராய்ச்சியொன்றுக்காக 2017.02.06 ஆம் திகதியன்று உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம், ஆராய்ச்சியின் பெறுபேறுகளை மேற்படி நிறுவனத்துக்கு ரூ 100/- தொகைக்கு அளிப்பதற்கு இரு தரப்பும் இணங்கியுள்ளதா என்பதையும்;

(iii) இந்த உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு முன்னதாக அதன் உள்ளடக்கம் தொடர்பாக பல்கலைக்கழக கல்வி சார் குழுவுக்கு அறிவுறுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உடன்படிக்கை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த விரிவுரை மண்டபமொன்று ஏற்புடைய நிறுவனத்தின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது எதற்காக என்பதையும்;

(vi) விரிவுரை மண்டபமொன்றை வழங்குவது தொடர்பாக உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது ஏன் என்பதையும்;

(vii) இந்த உடன்படிக்கை மற்றும் இதனால் ஏற்படக்கூடிய தாக்கம் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் குழுவினால் விசாரிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

660/ ' 18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பணிகள் யாவை என்பதையும்;

(iii) நுகர்வோர் அலுவல்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற எவ்வாறான குற்றங்கள் தொடர்பாக மேற்படி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க முடியுமென்பதையும்;

(iv) அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட,

(i) சுற்றி வளைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கையும் அவை மேற்கொள்ளப்பட்ட இடங்களும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நீண்ட தூர சேவைகள் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற அநேகமான உணவகங்களில் அதிக விலைக்கு உணவுகளை விற்பதோடு தரக்குறைவான உணவுகளை விற்பதாகவும், இதனால் நுகர்வோர் தெரிவு வரையறுக்கப்பட்டிருப்பதனால் நுகர்வோர் பெரிதும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

754/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அல்லது சிறை வைக்கப்பட்டுள்ள முப்படையின், பொலிஸின் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மற்றும் சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் அடங்களாக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சகல அலுவலர்களுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iii) இவர்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் மேற்படி தீர்ப்பு சம்பந்தமான தவறுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பயங்கரவாதத்தை தோல்வியுறச் செய்யும் போருக்கு ஒத்துழைப்பு வழங்கிய "சத்ய கவேசகயோ" அமைப்பின் நிஷாந்த த அல்விஸ் உள்ளிட்ட பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த சிவில் பிரசைகளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா;

(இ) இன்றேல், ஏன்?

10.

778/ '19

கௌரவ இந்திக்க அநுருத்த ஹேரத்,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில், 05 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக கடந்த அரசாங்கம் ஆரம்பித்த கரஸ்நாகல குடிநீர் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நின்றுபோயுள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iii) கருத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்து மக்களுக்குப் பயன்களைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள திகதி கடந்து நீண்டகாலமாகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், இக்கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்து அதன் பயன்களை மக்களிடம் கையளிக்க எதிர்பார்த்துள்ள திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

795/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏனைய அரச நிறுவனங்களுக்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்கட்டிடங்கள் மற்றும் அவற்றுக்காக அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை அல்லது வாடகை தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அக் கட்டிடங்களில் ஒப்பந்தங்கள் இல்லாமல் வழங்கப்பட்டுள்ள கட்டிடங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஒப்பந்தங்கள் இல்லாமல் கட்டிடங்களை பெற்றுக்கொண்ட ஆட்கள் வாடகை தொகையை செலுத்தியுள்ளார்களா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

966/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் 2037/16 ஆம் இலக்க, 2017.09.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட கட்டளையின் பிரகாரம் றுகுணு பல்கலைக்கழகத்தில் இணை சுகாதாரப் பீடமொன்றை அமைப்பதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அதற்கான கட்டிடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இணை சுகாதாரப் பீடத்தை அமைப்பதற்காக அமைச்சிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அதன்படி, நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

975/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெக்கிராவ பிரதேச செயலாளர் பிரிவில் கனேவல்பொல நகரத்திலிருந்து தாச்சிஹல்மில்லேவ வரை ஓடும் பாதையானது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் பயன்படுத்துகின்ற இப்பாதையினைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1010/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விமான சேவைகளை வழங்கியமைக்காக இலங்கை விமான படைக்கு அரச நிறுவனங்களிலிருந்து வருமதியாகவுள்ள நிலுவைத் தொகை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஒவ்வோர் அரச நிறுவனத்தின் பெயர், நிலுவையாகவுள்ள தொகை மற்றும் நிலுவையாகவுள்ள காலப்பகுதியை தனித்தனியாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இலங்கை விமானப்படை நிலுவைத் தொகையை அறவிட்டு கொள்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1028/ '19

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 இல் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 294 மற்றும் 295 என்பவற்றின் பிரகாரம் கொழும்பு பங்குச் சந்தையில் டொலர் பட்டியலிடப்படுவதற்காக வெளிநாட்டுக் கம்பனிகளை ஊக்குவிப்பதன் பொருட்டு பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) முன்மொழிவு இலக்கம் 295 இன் பிரகாரம் கொழும்பு பங்குச் சந்தையின் மூலதனமாக்கம் ரூபா 28 பில்லியன் தொடக்கம் 50 பில்லியன் வரை உயர்த்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பிரதம அமைச்சர் பல தடவைகளில் குறிப்பிட்டுள்ளவாறு "மூலதன இலாப வரியை" அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றதா என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உயர் அனுகூல வரி பங்குச் சந்தை அபிவிருத்திக்கு பாரிய தடையாக அமைந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(v) கடந்த காலத்துக்கு ஏற்புடையவாறு வரி விதிப்பதற்கு கருதியுள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 செப்தெம்பர் 03, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

42/ ' 18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், இதுவரை மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) மேற்படி பயனாளிகளைத் தெரிவு செய்தபோது மாகாண சபையினால் பின்பற்றப்பட்ட வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

97/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கேதுவாக தங்களது அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கேதுவான நேர்முகப் பரீட்சைகளின் போது நேர்முகப் பரீட்சை குழாம் நடந்துகொள்ள வேண்டிய விதம் தொடர்பாக வரையறைகள் உள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான வரைமுறைகளை சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட வரையறைகள் தயாரிக்கப்பட்டிராவிடின் எதிர்வரும் காலத்தில் அவ்வரையறைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அண்மைக்காலத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பிற்கு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதா என்பதையும்;

(ii) அந்நேர்முகப் பரீட்சைக்கு முகம்கொடுத்த பெண் விண்ணப்பதாரிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகும் வகையில் தனிப்பட்ட வாழ்க்கையுடன் தொடர்புடைய கேள்விகள் மற்றும் விடயப் பரப்பிற்கு புறம்பாக கேள்விகள் கேட்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iv) சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டமை சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

160/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தபடுகின்ற "கமகட்ட வெவக்" (கிராமத்திற்கு ஒரு குளம்) நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதுளை மாவட்டடத்தின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குளங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதுளை மாவட்டத்திலிருந்து அதிகளவான குளங்களை தெரிவுசெய்ய அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

275/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் மொனராகல மாவட்டத்தில் பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் சிறுநீரக நோயினால் உயிரிழந்த நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் மொனராகல மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர்களுக்கான சிகிச்சை நிலையங்களை நடாத்துகின்ற மருத்துவமனைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மருத்துவமனைகளில் கிசிகிச்சை நிலையங்களில் கடந்த ஆண்டில் பதிவு செய்துள்ள நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) அதன் பிரகாரம், மொனராகல மாவட்டத்தில் அதிக சிறுநீரக நோயாளர்கள் உள்ள கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(vi) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் மேற்படி சிறுநீரக நோயாளர்கள் தொடர்பாகவும் சிறுநீரக நோயை தடுப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

364/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தெல்தொட்ட தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

615/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த தினத்திலிருந்து இன்றுவரை கண்டி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திய குடிநீர் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த குடிநீர்க் கருத்திட்டங்கள் காணப்படுகின்ற பிரதேசங்கள் மற்றும் பாவனையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2017 ஆண்டில் நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் குடிநீரைப் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுள் தற்போது நீருக்கான இணைப்பு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதனையும்;

(iv) நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியின் கங்க இஹல பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கின்ற பெரும்பாலான மக்கள் குடிநீர் வசதியில்லாத காரணத்தினால் பாரிய பாதிப்பிற்கும் அசௌகரியங்களுக்கும் ஆளாகியுள்ளதனை ஏற்றுக்கொள்வாரா என்பதனையும்;

(v) அந்த மக்களின் குடிநீர் பிரச்சினையை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

765/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் கென்கே பாலத்திற்கு இருமருங்கிலுமான உப்பாறு மற்றும் இறால்குழி ஆகிய இரு பாலங்களும் மகாவலி கங்கையின் கிளை நீரோட்டங்களின் மீது அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளையாறான உப்பாறு மகாவலி கங்கையின் மடன்தெட்டிக்கு மேலாகவும், இறால்குழி கிளையானது மணலாறு எனும் இடத்திலும் மகாவலி கங்கையுடன் கலக்கின்ற போதிலும், கென்கே களப்பின் கடல் நீர் மகாவலி கங்கையில் கலப்பதை தவிர்க்கும் முகமாக அமைந்துள்ள மணல் திட்டில் மணல் அகழ்வதற்கு பிரதேச செயலாளரின் விதப்புரையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மணல் அகழ்வு உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மணல் கியூப்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2016 யூன் மற்றும் 2018 மே மாதங்களில் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இரண்டு மதிப்பீட்டு அறிக்கைகளினதும் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளின் விதப்புரைக்கு ஏற்ப, மணல் அகழ்வு உரிமப்பத்திரங் களை வழங்குவதில் காணப்படும் தடைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

798/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உபதலைவர் மற்றும் நடவடிக்கைப் பணிப்பாளர்களின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களின் பதிவு இலக்கங்கள் மற்றும் அவற்றின் வகைகள் யாவை என்பதையும்;

(iii) அவற்றில் வாடகை அடிப்படையில் அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வாகனங்களின் வகைகள் மற்றும் பதிவு இலக்கங்கள் யாவை என்பதையும்;

(v) 2016.01.01 முதல் இன்றுவரை மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாகனத்திற்கும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) இதுவரை மேற்படி வாகனங்களுக்கு எரிபொருளுக்காக மாதாந்தம் செலுத்தியுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

810/ '19

கௌரவ வாசுவே நாணயக்கார,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள் அல்லாத ஏனைய உயர் கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற பொறியியல், கணக்கியல் மற்றும் வேறு தொழில்சார் பாடநெறிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் ஒவ்வொரு பாடநெறிக்காக அறவிடுகின்ற கட்டணம் எவ்வளவென்பதையும்;

(iii) அமைச்சின் கீழுள்ள பல்கலைக்கழகங்களில் நடாத்தப்படுகின்ற கட்டணம் அறவிடப்படுகின்ற பாடநெறிகள் யாவையென்பதையும்;

(iv) அப்பாடநெறிகள் மற்றும் அறவிடப்படும் கட்டணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 - 2015 காலகட்டத்தில் மேற்படி அ(ii) மற்றும் அ(iv) ஆம் பாடநெறி களுக்கான கட்டணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசாங்க பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களின் உதவிப்பணம் ரூ. 5000/- வரை அதிகரிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) திறந்த பல்கலைக்கழகத்தின் பாடநெறி கட்டணம் வருடாந்தம் 10% அதிகரித்தாலும் ரூ. 312.50 ஆன மாதாந்த உதவிப்பணம் ஏன் அதிகரிக்கபடவில்லை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அரச மற்றும் அரச சார்பான உயர் கல்வி நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற அனைத்து பாடநெறிகள் (முதலாவது பட்டம்/டிப்ளோமா) முழுமையாக கடடணங்களிலிருந்து விடுபடவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

855/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளால் மனித உயிர்களும் ஆதனங்களும் அழிக்கப்படுதல் பரவலாக இடம்பெறுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி உயிர்களும் ஆதனங்களும் அழிக்கப்படுதல் காரணமாக குடும்பங்கள் அநாதரவான நிலைக்கும் நிர்க்கதி நிலைக்கும் உள்ளாகின்றனவென்பதையும்;

(iii) இவ்விதமாக அழிக்கப்படுகின்ற உயிர்களுக்கும் ஆதனங்களுக்கும் இழப்பீடு செலுத்துதல் தொடர்ச்சியாக தாமதித்து வருகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இழப்பீட்டுத் தொகைளை துரிதமாக செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

903/ '19

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.12.10 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலமாக நியதிச்சட்ட அலுவலர்களுக்கு சலுகை அடிப்படையில் வாகனம் இறக்குமதி செய்கையில் இரண்டாம் வாகனத்தைப் பெறுவதற்காக வழங்கப்பட்டிருந்த 5 வருட காலப்பகுதி 2016.07.14 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம் 2015.11.21 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 10 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டதனால் இதற்காக 2016 ஆம் ஆண்டினுள் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பாரிய அநீதியொன்று இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) 2018.06.08 ஆம் திகதிய 01/2018(1) ஆம் இலக்க சுற்றுநிருபம் 2018.06.09 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு அக்காலப்பகுதி 5 ஆண்டுகள் வரை குறைக்கப்பட்டதால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018.06.08 ஆம் திகதி வரை ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு அவ்வுரிமை கிடைக்காமல் போனது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட 01/2018(1) சுற்று நிருபத்திற்கு அமைவாக அமைச்சரவை தீர்மானத்தில் 2018.06.08 அல்லது 2018.06.09 எனத் திகதிகள் குறிப்பிடப்படாததால் ஏனைய நிறுவனங்களில் அதற்கு சமமான மட்டத்தில் ஓய்வு பெற்றிருந்த அலுவலர்களுக்கு உரித்தாகியிருந்த ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான அனுமதிப்பத்திரம் 01/2018(1) சுற்றுநிருபத்தின் மூலம் இவ்வலுவலர்களுக்கு அற்றுப்போகச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அதற்கமைவாக, 2016 ஆம் ஆண்டு முதல் 2018.06.08 வரையில் ஓய்வு பெற்ற, 2015 சுற்றுநிருபத்திற்கு அமைவாக தகைமைகளை பூர்த்தி செய்திருந்த அனைத்து அலுவலர்களுக்கும் இவ்வனுமதிப்பத்திரம் வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

12.

930/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் மகாவலி ''சீ'' வலயத்தில் அமைந்துள்ள ஒரேயொரு தேசிய பாடசலையாகிய அம்/தெஹிஅத்தகண்டிய மத்திய மகா வித்தியாலயம் 3000 இற்கும் அதிகமான மாணவர்களும் சுமார் 150 கல்விசார், கல்விசாரா பணியாளர்களும் இருக்கின்றதொரு பாடசாலை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அப்பாடசாலையின் பௌதீக மற்றும் மனித வளங்கள் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சினால் ஆய்வொன்று நடாத்தப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வறிக்கைக்கு அமைவாக அப்பாடசாலையின் தேவைப்பாடுக அடையாளம் காணுதல் மற்றும் பாடசாலை முறைமையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் செயற்பாடு தொடர்பான முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) மேலே அ(ii) இற்கு அமைவாக அல்லது கஷ்டப்பிரதேச கிராமங்களில் வசிக்கின்ற வறிய பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி அல்லது அப்பாடசாலையின் முன்னேற்றத்தின் பொருட்டு நிரல் அமைச்சின் மூலமாக விஷேட கவனம் செலுத்தப்படுமா என்பதையும் அவர் அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

939/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணர்வதன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ள அரிசியின் அளவு எத்தனை மெற்றிக் தொன் என்பதையும்;

(ii) அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி இறக்குமதிக்காக அறவிடப்பட்ட விசேட வர்த்தக பண்டங்கள் வரி எவ்வாறு திருத்தப்பட்டதென்பதையும்;

(iv) அரசாங்க நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு மற்றும் மேற்படி நிறுவனங்கள் அரிசி விற்பனையின் மூலமாக ஈட்டிக்கொண்டுள்ள இலாபம் அல்லது நட்டம் வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

968/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொண்டர் பொலிஸ் கான்ஸ்டபிளாக சேவையாற்றியவர்கள் 9/1374/360/047 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் படி இலங்கை ஆசிரியர் சேவை 3-II தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டதென்பதையும்;

(ii) இவர்கள் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய வெலிஓயா போன்ற பின்தங்கிய பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதையும்;

(iii) இதனால் ஆசிரியர் பற்றாக்குறையினால் மூடப்படவிருந்த அப்பிரதேச பாடசாலைகளை மீள கட்டியெழுப்பக் கூடியதாக இருந்ததென்பதையும்;

(iv) எனினும், இவர்களது எதிர்ப்பை கவனிக்காது அவர்களை மீண்டும் தொண்டர் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களின் கோரிக்கையின் படி இவர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

976/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் சனத்தொகை மிகுந்த நகரமொன்றாகிய கெப்பிட்டிகொல்லாவ நகரமானது திட்டமிடப்படாத நிர்மாணிப்புக்களைக் கொண்டமைந்த ஒரு நகரம் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்நகரத்தை திட்டமிட்டதொரு நகராக மாற்றியமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

## 2019 செப்தெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

44/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலாங்கொடை, ராஸ்ஸகல பிரதேச வைத்தியசாலை மண்சரிவு அபாயம் காரணமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தற்போது ராஸ்ஸகல ஆயுர்வேத நிலையத்தின் மேல்மாடியில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதையும்;

(iii) இதனால் சிகிச்சை பெற்றுக்கொள்ள வருகின்ற மக்கள் அசௌகரியத்துக்கு உட்படுகிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

98/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களை தடுப்பதற்காக செயற்படும் உத்தியோகத்தர்களை உற்சாகப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ள பரிசுத்தொகையின் பெறுமதி ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் யாது;

(ii) இதுவரையில் மேற்படி பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) கொடுப்பனவு வழங்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் யாதேனும் அளவுகோல்கள் காணப்படுகின்றனவா;

(iv) ஆமெனில், அந்த அளவுகோல்களை சபையில் சமர்ப்பிப்பாரா;

(v) உயிரைப் பணயமாக வைத்து செயற்படும் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு / பரிசுத் தொகையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமா;

(vi) ஆமெனில், குறிப்பிட்ட கால வரையறை மற்றும் செயன்முறையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

161/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழுள்ள வீதி முறைமை எத்தனை கிலோமீற்றர் நீளமுடையதென்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததையடுத்து மறுசீரமைக்கப்பட்ட மாகாண வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பதுளை மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான அநேகமான வீதிகள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் அந்த வீதி முறைமையை துரிதமாக மறுசீரமைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

365/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கலபொட தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

616/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தின், தெரிவு செய்யப்பட்ட 35 பாடசாலைகளுக்கு கிரிக்கெற் உபகரணங்களைக் கையளிக்கும் வைபவமொன்று 2018.10.02 ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சின் டங்கன் வைற் கேட்போர் கூடத்தில் நடாத்தட்டது என்பதனையும்;

(ii) அந்த வைபவத்திற்கு இலங்கை கிரிக்கெற் நிறுவனத்தின் முன்னால் நிர்வாக குழுவின் சார்பாக போட்டிகள் ஏற்பாட்டுக் குழுவின் பிரதானியாக கடமையாற்றிய திரு. பந்துல திசாநாயக்க என்பவர் பங்குபற்றியிருந்தார் என்பதனையும்;

(iii) அந்த வைபவத்தில் அவர் இலங்கை கிரிக்கெற் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ கழுத்துப்பட்டியையும் அணிந்திருந்தார் என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை கிரிக்கெற் நிறுவனத்தின் தேர்தல் பிற்போடப்பட்டு தகுதிவாய்ந்த அதிகாரியின் கீழ் செயல்படுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் முன்னால் அதிகாரி ஒருவர் இவ்வாறான வைபவமொன்றில் பங்குபற்றுவதற்குள்ள சட்டரீதியானதும் தார்மீகமானதுமான பின்னணி யாதென்பதையும்;

(ii) இலங்கை கிரிக்கெற் நிறுவனத்தின் ஊழல்நிறைந்த அதிகாரிகள் நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளில் பங்குபற்றுவதனைத் தடுப்பதற்காக அமைச்சு மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

799/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணப்பணிகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.09 முதல் 2018.10.25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளராக பணிபுரிந்தவர் யார்;

(ii) அவருக்கு செலுத்தப்பட்டுள்ள மாதாந்த கொடுப்பனவு யாது;

(iii) அவருக்கு செலுத்தப்பட்டுள்ள மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவு யாது;

(iv) அவர் பெற்றுக்கொண்டுள்ள மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு அல்லது போக்குவரத்து கொடுப்பனவு யாது;

(v) வாடகை வீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அதற்காக செலுத்தப்பட்டுள்ள மாதாந்த வாடகை யாது;

(vi) இவற்றுக்கு மேலதிகமாக ஏனைய கொடுப்பனவுகள் ஏதும் செலுத்தப் பட்டிருப்பின், அக்கொடுப்பனவுகள் மாதாந்தம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தவிசாளருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்களில் அதிகாரசபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(iii) வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அது பற்றிய விபரம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

811/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொஹுவல சந்திக்கு இட்டுச் செல்லும் பாதைகளின் ஓரமாக பாதசாரிகளுக்கான இடம் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அதிகளவு வாகனப் போக்குவரத்து காரணமாக நிலைமை மோசமடைந்துள்ளதா என்பதையும்;

(iii) இது தொடர்பாக 2016 இல் இருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட பாதைகளின் விஸ்தரிப்பு, அப்பாதைகளுக்கு அருகாமையில் உள்ள காணி அரசியல்வாதிகளுக்கும் லைசியம் கல்லூரிக்கும் சொந்தமாக இருப்பதன் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இது தொடர்பாக அவர் ஒரு கூற்றை தெரிவிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1019/ '19

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,— உள்ளக, உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களுக்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பதிவாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை யாதென்பதையும்;

(iii) நான்கு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு மேலதிக பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது ஏன் என்பதையும்;

(v) பிரதான வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள மருத்துவ பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vi) பதிவாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மரபினை மாற்றுவதற்கான முறையியலொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 செப்தெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

56/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் போது போட்டிகளில் ஆட்டநிர்ணய சூதாட்ட சதியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனின், இது பற்றி அமைச்சினால் விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனின், மேற்படி விசாரணையின் தகவல்களை சமர்ப்பிப்பாரா;

(iv) இப்போட்டிகளில் ஆட்டநிர்ணய சூதாட்ட சதியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

104/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வேலைவாய்ப்புகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்ற ஊழியர்களில் உரிய சேவைக் காலத்தை நிறைவு செய்த பின்னர் நாடு திரும்பாத ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இம்முறைப்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) விசாரணை நடத்தப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நாடு திரும்பாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டறியப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அக்காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) நாடு திரும்பாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டறியப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) நாடு திரும்பாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டறியப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

162/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாகனத்தினதும் இலக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாகனமும் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவு யாதென்பதையும்;

(iv) நகர சபைக்கு சொந்தமான வாகனங்கள் வேறு பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாயின், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களினதும் நிறுவனங்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களை வேறு தரப்புகளுக்கு வழங்கும் போது ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாயின் அது சம்பந்தமாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

276/ ’18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வறுமையை அளவிடுகின்ற பொருளாதார சுட்டெண்கள் யாவையென்பதையும்;

(ii) இதற்கு அமைவாக இன்றளவில் உள்ள வறிய மக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் வறுமை அடிப்படையில் முதல் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளும் யாவை என்பதையும்;

(iv) இலங்கையில் மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களின் அடிப்படையில் வறுமை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) கடந்த 10 ஆண்டு காலத்தினுள் இலங்கையின் வறுமை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

661/ ’ 18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் அமைந்துள்ள,

(i) வன ஒதுக்கங்களின் அடர்த்தியும்;

(ii) வன ஒதுக்கங்களில் அமைந்துள்ள குளங்களின் எண்ணிக்கையும்;

(iii) மழைக் காடுகளும் அவற்றின் அடர்த்தியும்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தாங்கள் அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டில்,

(i) சூழல் பாதுகாப்பு கருதி மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) சூழல் நேய தொழில்முயற்சிகளை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பல நகரங்கள் ஊடாக வழிந்தோடும் கழிவு நீர் ஆறுகளில் கலப்பதன் மூலம் பெருமளவில் நீர் மாசடைவதால் இவ்வாறு கழிவு நீர் நேரடியாக ஆறுகளில் கலப்பதைத் தடுக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

766/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் என்றழைக்கப்படுகின்ற வைய்ன் ஸ்ரோஸ்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி உரிமைப்பத்திரம் பெற்றுள்ளவர்களின் பெயர், முகவரி, உரிமப்பத்திர இலக்கம் மற்றும் முதலில் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது ஆண்டு மற்றும் மேற்படி வியாபார நிலையம் பேணிவரப்படுகின்ற இடம் என்பன தனித்தனியே யாது என்பதையும்;

(iii) செறிவின் விகிதத்திற்கு அமைய மற்றும் ஒவ்வொரு வர்த்தகப் பெயர்களுக்கு அமைய 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரை வருடாந்தம் வெளிநாட்டு மதுபானத்தின் உபயோகம் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

800/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டுக்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மீண்டெழும் செலவினமாக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கீட்டிலிருந்து நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு வெவ்றோக எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மேற்படி ஒதுக்கீடானது விகிதாசாரமாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

866/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரந்தன, விஹாரஹேன பிரதேசத்தில் பேணிவரப்படும் நீர் போத்தலில் அடைத்தல் தொழிற் முயற்சி காரணமாக பிரதேசத்தில் குடிநீர் மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இத்தொழில்முயற்சி ஆரம்பத்தில் 2003.12.16 ஆம் திகதி "ரபர் ப்ரடக்ட்ஸ்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு பேணிவரப்பட்டதுடன் 2017.06.30 ஆம் திகதி விஹாரா நெச்சுரல் ப்ரடக்ட்ஸ் எனும் பெயரில் குழாய் கிணற்றின் மூலம் நீரை பெற்று அதனை போத்தலில் அடைத்து விற்பனை செய்ப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) பிரதேச மக்களின் பாரியளவிலான எதிர்ப்புகளை கவனத்திற் கொண்டு இது சம்பந்தமாக நான் பல கடிதங்களை அனுப்பினாலும் இற்றைவரை இதற்கான உரிய தீர்வு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) இது சம்பந்தமாக விசாரணையொன்றை நடாத்தி சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் நீர் மட்டம் வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

932/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், வழி இலக்கம் 595 ஊடாக பங்கொல்லாமடவில் இருந்து அக்குறணை, கண்டி வழியாக மஹரகம மற்றும் கொழும்பை வந்தடையும் வகையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்று நாள்தோறும் அதிகாலை 4.15 இற்கு சேவையில் ஈடுபட்டிருந்ததை அறிவாரா என்பதனையும்;

(ii) மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் உட்பட பொது மக்களது நலன் கருதி சேவையில் ஈடுபடுத்தியிருந்த அந்த பேருந்து சேவையை நிறுத்துவதற்கு கொள்கைரீதியான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த பேருந்து, சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இறுதித் திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி பேருந்து சேவையை வாரத்தின் அனைத்து நாட்களிலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

969/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடைவள அபிவிருத்தி, நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டகல, சிறிபெரகும் வித்தியாலயத்திற்கு அருகே அமைந்திருந்த கோழிப்பண்ணை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்களின் எதிர்ப்புக் காரணமாக 2015 ஆம் ஆண்டு அகற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோழிப் பண்ணைக்குப் பதிலாக, தற்போது பாரியளவிலான மாட்டுத் தொழுவமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) மாட்டுத் தொழுவத்தை தாபிப்பதன் மூலம் அருகே அமைந்துள்ள சிறிபெரகும் வித்தியாலயத்தின் மாணவர்களின் சுகாதார நிலைமைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக் காரணமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மாட்டுத்தொழுவம் ஒன்றை நிர்மாணிப்பதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் கவனத்தில் கொண்டு இந்த மாட்டுத் தொழுவத்தை நிர்மாணிப்பதை நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

977/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் அத்தியாவசியமற்ற அலுவலர்கள் மிகையாகவும் அத்தியாவசிய அலுவலர்கள் பற்றாக்குறையாகவும் இருப்பதை அறிவாரா;

(ii) மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தி மக்களுக்கு மேலும் பயன்மிக்க சேவையை வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்கின்ற திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1003/ ’19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு மார்ச்சு 18 ஆம் திகதியன்று, கொழும்பு செங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்ற “நேர்மை திறன் மாநாடு” எனப்படும் அரச சேவையில் இலஞ்சத்தை ஒழிப்பதற்கான ஐந்தாண்டு திட்டத்தை வெளியிடுவதற்காக நடைபெற்ற விழாவை ஏற்பாடு செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அவ் விழாவுக்கு செலவான முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அவ் விழாவில் பங்கேற்ற அழைப்பு விருந்தினர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்கான செலவை ஏற்ற நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1023/ ’19

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 ஆண்டுகளுக்குள்,

(i) மதுவரி சட்டத்தின் 58 “அ” பிரிவின் கீழ் மதுவரி அலுவலர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதற்கான நிதியத்திலிருந்து 818 அறிவித்தலை மீறி நிதிசார் முறைகேடுகளை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(ii) அவ்வறிவித்தலின்படி வருமானம் சேகரிக்கின்ற சீருடை அணிகின்ற பணியாட்டொகுதியினரின் 1200 பேருக்கும் வருமானம் சேகரிக்காத சீருடை அணியாத 150 பேருக்கும் வருடாந்தம் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும் அப்பணம் நிதியத்தின் எத்தனை வீதம் என்பதையும்;

(iii) அவ்வறிவித்தலின் (vi) இன் விசேட நிபந்தனைகளின் எல்லையை நெருங்காத சீருடை அணிகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 5.2 பிரிவினை மீறி, கடந்த 5 ஆண்டுக்குள் சட்டரீதியற்றவகையில் பணம் செலுத்த அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(ii) 7.2-ii இல், உரிமை கோரக்கூடிய பணியாட்டொகுதியினருக்கு கடந்த 5 ஆண்டுக்குள் எத்தனை அளவை மீறிய வெகுமதி செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்; அது மொத்த வெகுமதி நிதியத்தின் வருமானத்தில் எத்தனை வீதம் என்பதையும்;

(iii) 77.2-ii இன் தரங்களுக்கு, உரித்தான பகுதியுடன் தொடர்புடைய பணத்தொகையை செலுத்தி, எஞ்சியதை 5.2 இன் கீழ் சட்டரீதியற்ற முறையில் வரவுவைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி சட்டவிரோதமான சமநிலையற்ற பணம் செலுத்தல் தொடர்பாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1029/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இல. 240 மூலம் கட்டிட மற்றும் நிர்மாணத்துறையில் ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய மூன்று மாதங்களுக்கு இளைஞர்கள் 7500 பேர் வீதம் வருடமொன்றுக்கு 30,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) முப்பதாயிரம் வரையிலான பெருமளவு இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் யாவை என்பதையும்; அந்த ஒவ்வொரு நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1034/ '19

கௌரவ கனக ஹேரத்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான சீபோத் பிரிவில் அமைந்துள்ள சென்ட் கெத்தரின் தோட்டம் களனி கங்கையின் நீரேந்துப் பகுதி என்பதுடன் அது மரைகள், மான்கள் ஆகிய விலங்குகளின் வாழ்விடம் என்பதனையும்;

(ii) அது உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள பிரதேசம் என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த தோட்டத்தில் 50 ஏக்கர் காணியொன்றினை பிரித்து தனியார் ஒருவருக்கோ அல்லது குழுவொன்றிற்கோ வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும்;

(ii) அதற்கென காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினூடாக நிலஅளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அந்த நிலஅளவை நடவடிக்கைகள் அரசாங்க விடுமுறை நாட்களில் இரகசியமாக மேற்கொள்ளப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரதேசம் தொடர்பில் தனியார் துறையினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் சுற்றாடல் முக்கியத்துவம் காரணமாக மக்களது எதிர்ப்பின் காரணமாக நிராகரிக்கப்பட்டாலும், இந்த நிலைமையின் கீழ் அந்த பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட மாட்டாதா என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 செப்தெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

58/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில் கென்தலந்த மற்றும் கொடகம என்ற பெயரில் கிராமங்கள் இருக்கின்றதென்பதையும்;

(ii) அக்கிராமங்கள் இன்னமும் அதிகஷ்டமான நிலையில் இருக்கின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அக்கிராமங்களுக்குத் தேவையான பொது வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

105/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு யூன் 11 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாட்களில் குருணாகல் மாவட்டத்தை தாக்கிய கடும் காற்று காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்தோர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அழிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உரிய சொத்துக்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதி உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) உயிரிழப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) எவ்வித இழப்பீடும் வழங்கப்படாத வீடுகள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

163/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள பிரிவெனாக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரவெனாவிலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பிரிவெனாக் கல்வியை தரமுயர்த்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

277/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) அரிசி இறக்குமதியின்போது ஒரு கிலோ அரிசிக்கு அறவிடப்பட்ட வரித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இதற்கமைவாக 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ள மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஆண்டுகளில் அரிசி இறக்குமதிக்காக அறவிடப்பட்ட வரித் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆண்டுகளில் அரிசி விலையின் தளம்பல் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

768/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் வினியோகிக்கப்பட்டுள்ள கெஷினோ உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த உரிமம் பெறுநர்களின் பெயர்கள், முகவரிகள், உரிம இலக்கங்கள் மற்றும் முதல் முறையாக உரிமம் விநியோகிக்கப்பட்ட திகதி அல்லது ஆண்டு அத்துடன் கெஷினோ வியாபாரம் கொண்டுநடத்தப்படும் இடம் யாது என்பதையும்;

(iii) இன்றளவில் கோரப்பட்டுள்ள புதிய உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

801/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2018.12.31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின்,

(i) மீண்டெழும் செலவினம்;

(ii) அதன் ஊழியர்களது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கான செலவினம்;

(iii) வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங்களுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை;

(iv) எரிபொருளுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை;

(v) மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்திற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை;

(vi) தொலைபேசி கட்டணத்திற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை;

எவ்வளவென்பதை தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகாரசபையின் தவிசாளரின் மற்றும் பணிப்பாளர் சபையின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பபனவுகளுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

867/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தோட்டத்துறை மக்களுக்கு குறித்த தோட்டங்களிலிருந்து 07 பர்சஸ் வீதம் இருப்பாட்சிக்கு வழங்குவது மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்கமைய, எஹலியகொட, அயகம, கிரிஎல்ல மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள தோட்டத்துறையில் வசிப்பவர்களுக்கு அவ்வாறே 07 பர்சஸ் காணி வீதம் இருப்பாட்சிக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

876/ '19

கௌரவ தேனுக விதானகமகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் பதுளை மாவட்டத்தில், மகியங்கனை தேர்தல் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டம் தொடர்பான தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) அவ்வொன்றிணைந்த நீர் விநியோகத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் மூலமாக குடிநீர் வசதிகளைப் பெற்றுகொடுக்க வேண்டியிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குடிநீர் வசதியைப் பெற்றுக் கொடுக்க முடியாமல்போன குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அந்நீர் விநியோகத் திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(v) இந்நீர் விநியோகத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை ஆரம்பிக்கும் ஏற்பாடொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது தொடர்பான தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிறுநீரக நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்ற மகியங்கனை தேர்தல் தொகுதியிலுள்ள மக்களது குடிநீர் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

877/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018/2019 பெரும் போகத்தின்போது இலங்கையில் சோளம் பயிரிடப்பட்ட காணியின் அளவு யாதென்தையும்;

(ii) அவற்றில் படைப்புழு தொற்றிற்கு உள்ளாகி அழிவடைந்த சோளப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்;

(iii) அப்பயிர்ச் செய்கை அழிவினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட அண்ணளவான நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iv) படைப்புழு தொற்றுக்கு உள்ளாகி சோளப்பயிர்ச் செய்கை அழிவடைந்தமையால் பாதிப்பிற்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அந்நிவாரணங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

933/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. ஏ.எச்.எம். பைருக் கொழும்பு, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் சேவையில் ஈடுபட்டிருந்து மேமா/கொ/வலய/ஆநி/7 என்ற இலக்கமுடைய 2006.06.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக 1989.03.31 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட உதவி ஆசிரியர் என்பதனை அறிவாரா;

(ii) மேற்படி திகதியிலிருந்து ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட பைருக் அவர்களுக்கு 1997.01.15 ஆம் திகதியிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் இதுவரையில் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்காது தாமதமடையச் செய்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) 25 வருட காலமாக ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருந்து தற்போது வயோதிப நிலையில் உள்ள பைருக் அவர்களுக்கு உரித்தான ஓய்வூதிய கொடுப்பனவை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்காக கல்வித் திணைக்களத்தினூடாக உரிய கோப்புக்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் ஓய்வூதியத்தை தாமதிக்காது பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

937/ '19

கௌரவ விதுர விக்ரமநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இங்கிரிய, காமினி மத்திய மஹா வித்தியாலயத்தின் மாணவர்களின் பணம், பல வருடங்களாக தவறாகப் பயன்படுத்தப்படல் மற்றும் மேலும் பல முறைகேடுகள் பற்றி மாகாண கல்வி உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடொன்றுக்கு அமைய கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(ii) கணக்காய்வுப் பரிசோதனைக்கு அமைய, தவறான நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, ஹொரணை வலயப் பணிப்பாளர் முதல் மேல் மாகாண கல்வி அமைச்சர் வரை சகல அலுலவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை பாடசாலையிலிருந்து நீக்காத பட்சத்தில், அதிபர் சமர்ப்பித்த கோரிக்கைக்கு அமைய அதிபருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பாடசாலையை கட்டியெழுப்புவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதிபரை இடமாற்றம் செய்து குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை அதே பாடசாலையில் தடுத்துவைத்து குறித்த நிதிசார் குற்றச்சாட்டுக்களை சிறுவிடயமாகக் கருதி செயற்படுவதன் மூலம் குற்றம் சாட்டப்பட்டோர் பலமடைவதன் காரணமாக பெற்றோர் மற்றும் மாணவர்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வாறு பாடசாலை மாணவர்களின் பணத்தை தமது தனிப்பட்ட இலாபத்திற்காக தவறாகப் பயன்படுத்துகின்ற ஆட்களை பாதுகாப்பது தவறான முன்மாதிரியாக இருக்காதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

978/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணத்துக்குரிய மாத்தளை மாவட்டத்தின் கலேவெல நகரில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம், சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் பொலிஸ் திணைக்களத்தினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடமொன்றிலே இயங்குகின்றதென்பதையும்;

(ii) மேற்படி கட்டடமானது, கலேவெல, நபடகஹவத்த, மஸ்ஜிதுல் பலாஹ் என்ற முஸ்லிம் பள்ளிவாசலுக்கு சொந்தமான காணியிலேயே அமைந்துள்ளதென்பதையும்;

(iii) இக் கட்டடத்துடன் கூடிய காணியே மேற்படி பள்ளவாசலுக்குள்ள ஒரே சொத்து என்பதையும்;

(iv) மேற்படி சொத்தினை பள்ளவாசலுக்கு மீளப் பெறுவதற்கு பள்ளிவாசலின் சமயப் பெரியார்களினால் அவ்வப்போது பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(v) இதற்கான மாற்றுத்திட்டமாக பொலிஸ் நிலையத்தை அமைப்பதற்கு கலேவெல நகரில், பத்கொலகொல்ல வீதியில் ஒன்றரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு காணி ஒதுக்கப்பட்டுள்ள நிலையிலும், குறித்த பொலிஸ் நிலையத்தை அக் காணியில் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி இப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியையும் கட்டடத்தையும் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,-

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1005/ ' 19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச செயலகப் பிரிவில், 1605 ஆம் இலக்க தம்பகந்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த, ஹிபுடாவ கிராமத்தின், 03 ஆம் இலக்க கோவில்கந்த என்ற தனியார் காணியில் தொல்லியல் பெறுமதிமிக்க இடிபாடுகள் பெருமளவில் பரவிக் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2014.06.11 ஆம் திகதியன்று இவ்விடயம் தொடர்பாக தொல்லியல் ஆணையாளர் நாயகத்தினால் அமைச்சு செயலாளர் ஊடாக அப்போதைய பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு பதில் அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) 2014.05.27 ஆம் திகதியன்று தொல்லியல் அதிகாரிகள் சிலர் வருகை தந்து மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் பிரகாரம், சுமார் ஐந்து ஏக்கர் காணியில் தொல்லியல் இடிபாடுகளாக தூபிக் கட்டடமொன்றும், இரண்டு கட்டட இடிபாடுகளும், தூண் பாதக் கற்களும், பண்டைய செங்கல் ஒடுகளும் களிமண் பாத்திரத் துண்டுகளும் பரவி உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இக் காணியை எல்லைக் கற்கள் இட்டு பாதுகாப்பு கருதி ஒதுக்குவதற்கும், அந்த இடத்தை பாதுகாக்கப்பட்ட நினைவிடமாக வர்த்தமானியில் வெளியிடுவதற்காக பதிவு செய்வதற்கும், 2014 ஆம் ஆண்டிலேயே நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து சுமார் 05 ஆண்டுகளுக்கு கிட்டிய காலம் கடந்துள்ள போதிலும், இற்றைவரை அதனை நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1012/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களுக்கு உன்னதமான சுகாதார சேவையை வழங்குவதற்காக இன்றளவில் தேவைப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2019.01.01 ஆம் திகதியளவில் அரச சேவையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தேவையான இலக்கினை பூர்த்தி செய்து கொள்வதற்காக எதிர்வரும் ஆண்டுகளில் அரச சேவைக்கு ஆட்சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி மருத்துவ பட்டதாரிகளை உருவாக்குவதகு அரசாங்கம் எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1030/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 243 இன் படி, சுற்றுலாக் கைத்தொழில் துறை தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய முன்மொழிவில் குறிப்பிடப்பட்டவாறு காலாண்டு ஒன்றுக்கு 3000 பேர் வீதம் வருடமொன்றுக்கு 12,000 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் யாவை என்பதையும்; அந்த நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொடுப்பனவுத் தொகையைக் குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

1.

பா. 5/ '18

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ சஜித் பிரேமதாஸ

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

கௌரவ வஜிர அபேவர்தன,— அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபைகள் உள்ளடங்கலான சட்டரீதியற்ற நியமனம் பெற்ற அனைவரும் சட்டவிரோதமான முறையில் செயற்படுவது தொடர்பாக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டுமென்பது,— 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரசியலமைப்புக்கு மாற்றமாக பிரதம அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாலும்;

பிரதம அமைச்சர், அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகிய பதவிகளை எந்த ஓர் ஆளும் சட்டரீதியில் வகிக்காததாக கௌரவ சபாநாயகர் அவர்கள் வெளிப்படுத்தியிருப்பதாலும்;

பிரதமரை சட்டரீதியற்ற முறையில் நீக்கியதன் விளைவாக எல்லா நடவடிக்கைகளும் நியமனங்களும் சட்டவிரோதமானதாகவும் முற்றிலும் வறிதானதாகவும் மாறுவதாலும் அத்தகைய வறிதான நியமனங்கள் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு ஆகிய அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் சபைகள் ஆகியவற்றை உள்ளடக்குவதாலும்;

அத்தகைய அனைத்து நியமனங்களும் எந்த வகையிலும் சட்டரீதியானதாக அமையவில்லை என்றும் எந்த ஓர் ஆளுக்கும் அத்தகைய பதவிகளை வகிப்பதற்கும் அத்துடன்/அல்லது அவற்றில் தொடர்ந்து பணியாற்றுவதற்கும் உரிமை இல்லை என்றும்;

அத்தகைய பதவிகளை வகிக்கின்ற அத்துடன்/அல்லது அவற்றில் தொடர்ந்து பணியாற்றுவதாக கருதப்படும் ஆட்கள் சட்டவிரோதமாக செயற்படுகிறார்கள் என்றும் எதிராக வழக்குத் தொடரப்படுவதற்கு பொறுப்பாதல் வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

2.

பா. 6/ ’18

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற பிரதம அமைச்சரின் செயலாளர் திரு. சிறிசேன அமரசேகர, குடியரசின் நிதியினை தொடர்ந்தும் முறைதகாத வகையில் பயன்படுத்துகின்றமை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டும் என்பது,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற பிரதம அமைச்சரின் செயலாளர் திரு. சிறிசேன அமரசேகர, 2018 நவம்பர் 30 ஆம் திகதிய சபையின் தீர்மானத்தால் தடைபெறாமலும் வெளிப்படையாக அதன் அதிகாரத்திற்குப் பணிய மறுத்தும், சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற பிரதம அமைச்சரின் செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தொடர்ந்தும் குடியரசின் நிதிகளைப் பெறுவதாலும்;

இதன் விளைவாக அந்நிறுவனம் செயற்பட்டுள்ள விதம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு சொல்லப்பட்ட திரு. சிறிசேன அமரசேகர அவர்கள் பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

3.

பா. 7/ ’18

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரின் செயலாளர் திரு. எஸ். ஆர். ஆட்டிகல, குடியரசின் நிதியினை தொடர்ந்தும் முறைதகாத வகையில் பயன்படுத்துகின்றமை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டும் என்பது,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரின் செயலாளர் திரு. எஸ். ஆர். ஆட்டிகல, 2018 நவம்பர் 30 ஆம் திகதிய சபையின் தீர்மானத்தால் தடைபெறாமலும் வெளிப்படையாக அதன் அதிகாரத்திற்குப் பணிய மறுத்தும், சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற நிதி மற்றும் பொருளாதார அமைச்சரின் செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தொடர்ந்தும் குடியரசின் நிதிகளைப் பெறுவதாலும் ;

இதன் விளைவாக அவ்வமைச்சு செயற்பட்டுள்ள விதம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு சொல்லப்பட்ட திரு. எஸ். ஆர். ஆட்டிகல அவர்கள் பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

4.

பா. 8/ ’18

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சரின் செயலாளர் திரு. உபாலி மாரசிங்க, குடியரசின் நிதியினை தொடர்ந்தும் முறைதகாத வகையில் பயன்படுத்துகின்றமை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டும் என்பது,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சரின் செயலாளர் திரு. உபாலி மாரசிங்க, 2018 நவம்பர் 30 ஆம் திகதிய சபையின் தீர்மானத்தால் தடைபெறாமலும் வெளிப்படையாக அதன் அதிகாரத்திற்குப் பணிய மறுத்தும், சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சரின் செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தொடர்ந்தும் குடியரசின் நிதிகளைப் பெறுவதாலும் ;

இதன் விளைவாக அவ்வமைச்சு செயற்பட்டுள்ள விதம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு சொல்லப்பட்ட திரு. உபாலி மாரசிங்க அவர்கள் பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

5.

பா. 9/ ’18

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரின் செயலாளர் திரு. எஸ். ரீ. கொடிகார, குடியரசின் நிதியினை தொடர்ந்தும் முறைதகாத வகையில் பயன்படுத்துகின்றமை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டும் என்பது,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரின் செயலாளர் திரு. எஸ். ரீ. கொடிகார, 2018 நவம்பர் 30 ஆம் திகதிய சபையின் தீர்மானத்தால் தடைபெறாமலும் வெளிப்படையாக அதன் அதிகாரத்திற்குப் பணிய மறுத்தும், சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரின் செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தொடர்ந்தும் குடியரசின் நிதிகளைப் பெறுவதாலும் ;

இதன் விளைவாக அவ்வமைச்சு செயற்பட்டுள்ள விதம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு சொல்லப்பட்ட திரு. எஸ். ரீ. கொடிகார அவர்கள் பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

6.

பா. 10/ ’18

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சரின் செயலாளர் திரு. பேர்னாட் வசந்த பெரேரா, குடியரசின் நிதியினை தொடர்ந்தும் முறைதகாத வகையில் பயன்படுத்துகின்றமை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டும் என்பது,— சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சரின் செயலாளர் திரு. பேர்னாட் வசந்த பெரேரா, 2018 நவம்பர் 30 ஆம் திகதிய சபையின் தீர்மானத்தால் தடைபெறாமலும் வெளிப்படையாக அதன் அதிகாரத்திற்குப் பணிய மறுத்தும், சட்டரீதியற்ற முறையில் தோற்றிவருகின்ற வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சரின் செலவுகளை ஈடுசெய்வதற்காகத் தொடர்ந்தும் குடியரசின் நிதிகளைப் பெறுவதாலும் ;

இதன் விளைவாக அவ்வமைச்சு செயற்பட்டுள்ள விதம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு சொல்லப்பட்ட திரு. பேர்னாட் வசந்த பெரேரா அவர்கள் பொருத்தமான பாராளுமன்றக் குழுவொன்றுக்கு வரவழைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

7.

பா. 61/ ’19

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ கனக ஹேரத்

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ டி.வீ. சானக

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ தேனுக விதானகமகே
கௌரவ பிரசன்ன ரணவீர
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க
கௌரவ ஜனக பண்டார தென்னகோன்
கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன
கௌரவ சிசிர ஜயகொடி
கௌரவ எஸ். பிரேமரத்ன
கௌரவ சாலிந்த திசாநாயக்க
கௌரவ தாராநாத் பஸ்நாயக்க
கௌரவ அசோக்க பிரியந்த
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ எஸ்.எம். சந்திரசேன
கௌரவ டிலான் பெரேரா
கௌரவ அருந்திக்க பர்னாந்து
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா
கௌரவ நிமல் லான்சா
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா
கௌரவ திலங்க சுமதிபால
கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன
கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன
கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
கௌரவ காமினி லொக்குகே
கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே
கௌரவ விஜித பேருகொட
கௌரவ லொஹான் ரத்வத்தே
கௌரவ ஆனந்த அலுத்கமகே
கௌரவ திளும் அமுணுகம
கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன
கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ பியல் நிசாந்த த சில்வா
கௌரவ ரோஹித அபேகுணவர்தன
கௌரவ சிறிபால கமலத்
கௌரவ துலீப் விஜேசேக்கர
கௌரவ விமலவீர திசாநாயக்க
கௌரவ பிரேமலால் ஜயசேக்கர
கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர
கௌரவ அநுராத ஜயரத்ன
கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ ஜயந்த சமரவீர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ றிஸாட் பதியுதீன் மீதான நம்பிக்கையின்மை,—

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் என அறியப்படும் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் உட்பட ஒன்பது இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்கும் படி இலங்கை இராணுவத் தளபதிக்கு அழுத்தம் பிரயோகித்ததாக இராணுவத் தளபதி 2019 மே 5 ஆம் திகதிய சிலுமின பத்திரிகைக்கு கூறியுள்ளதாலும்;

சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்ட இம்ஷான் அஹ்மட் ஈப்ராஹிமுக்கு சொந்தமான தொழிற்சாலைக்கு வழமையான நடைமுறைக்கு மாறாக வாணிப மற்றும் கைத்தொழில் அமைச்சிலிருந்து வெற்றுத் தோட்டாக்களை வழங்கியிருப்பதாலும்;

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இராணுவவீரர்கள் நீதிமன்றத்தில் முன்னிருத்தப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக விளக்க மறியலில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட இலங்கை பொலிஸார், குண்டுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக சந்தேகிக்கப்படுகின்ற மேற்படி தொழில்சாலையின் ஊழியர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராக்காமல் 2019.05.06 திகதி அவர்களுக்கு பிணை வழங்க இடமளிப்பதினூடாக அரசியல் அழுத்தம் காணப்பட்டதாக நியாயமான சந்தேகம் எழுவதனாலும்;

அமைச்சர் றிஸாட் பதியுதீன் தலைமை தாங்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொருளாளரான எஸ்.கே.பீ. அலகுதீன் பயங்கரவாதிகளின் முயற்சிகள் பற்றிய தகவல்களை அறிந்திருந்து அதனை அதிகாரிகளுக்கு வெளிப்படுத்தாதிருந்ததன் மூலம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையினாலும்;

அமைச்சரின் நெருங்கிய நண்பர் ஒருவரான அல்ஹாஜ் மொஹமட் இப்றாஹீம் யுசுப் இப்றாஹீமின் மகன்கள் இருவர் தற்கொலை பயங்கரவாதிகளாக செயற்பட்டதனாலும்;

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரான அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகத் தோற்றிய அப்துல் ஹனூத் பயங்கரவாத சந்தேகநபராக கைது செய்யப்பட்டிருப்பதனாலும்;

அமைச்சரின் ஆலோசகர் ஒருவராக தோற்றும் மௌலவி ஒருவர் பயங்கரவாத சந்தேக நபராக கைது செய்யப்பட்டுள்ளதனாலும்;

அமைச்சரின் சகோதரர் ஒருவரான ரிப்கான் பதியுதீன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாது அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டதனாலும்;

உயிர்த்த ஞாயிறன்று பயங்கரவாத தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு அமைச்சர் முறையற்ற அழுத்தங்களை பிரயோகிப்பதாக இராணுவ மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூறும் தகவல்களின் அடிப்படையில் சமூகத்தில் பலம்மிக்க கருத்தொன்று உருவாகியிருப்பதனாலும்; மற்றும்

பயங்கரவாதிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருப்பதாக எழுந்திருக்கும் சந்தேகம் தெளிவாக உறுதியாகியிருக்கும் பட்சத்தில் அமைச்சரிடம் இதுபற்றி இதுவரை விசாரிப்பதற்கு பொலிஸாருக்கு இயலாது போனதால் அவர் அமைச்சர் பதவியை வகிப்பதானது விசாரணைகளுக்குத் தடையாக இருக்குமென காணப்படுவதனாலும்;

கௌரவ கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் றிஸாட் பதியுதீன் தொடர்ந்தும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சாராக பதவி வகிப்பதற்கான நம்பிக்கையை இழந்திருப்பதாக இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.